நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 5

தொகுதி: 113

திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்

விலை: ரூ.20

மே - 2019

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911

மன்னர் பாசுகர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறிஞர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ்மணம் 4

2. சிலம்புப்புதையல் - காப்பிய உத்திகள் 7

- முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. வீரசோழியம் 11

- பேராசிரியர் ப.மருதநாயகம்

4. சொல்லியல் கோட்பாடு 19

- பேராசிரியர் செ.வை.சண்முகம்

5. அணிகிளர் கலாவம் 26

- பேராசிரியர் கசுத்தூரிராமசாமி

6. 'மொழிப்பற்று' - மு.வ.வின் சிந்தனைகள் 33

- முனைவர் நெல்லை ந.சொக்கலிங்கம்

7. சங்கச் செய்திகள் 41

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.இளங்குமரனார், சிலப்பதிகாரக் காப்பிய உத்தி குறித்து எழுதுகிறார். காப்பிய ஆசிரியனுக்கும் அதனைக் கற்கும் உணர்வுடையோர்க்கும் உரிய உறவு சிந்திக்கப்படுகிறது. காவிய நுகர்வுக்குக் கல்வி கேள்விப் பின்புலமும் பரந்துபட்ட உலகியல் அறிவும் இன்றியமையாதது. கல்வி அறிவு இல்லாத ஒருவனிடத்தில் காப்பியம் குறித்த செய்திகளைப் பகிர்ந்துகொள்ள இயலாது. அவனுக்கு அன்றாடவாழ்க்கைச் சுமையே பெரிது.

காப்பியங்கள் பலகால் பல தலைமுறைகள் கற்று அனுபவிப்பதற்குரியன. பயில்தொறும் நூல் நயம் கற்பவனை மீண்டும் மீண்டும் சிந்திக்கத் தூண்டுவதாக அமைதல் வேண்டும். அதனால் காப்பிய ஆசிரியனுக்கும் கற்பவனுக்கும் இடையில் சிந்தனை, அறிவுப் பயணம் இடையறவு இன்றி நிகழ்தல் மையம். குறிப்புப் பொருளை - தொனிப் பொருளை ஆசிரியன் குறிப்பாக தெரிவிக்கும் தன்மையை கற்பவன் தொடர்ந்து ஈடுபட்டுப் புரிந்து ரசிக்கின்ற மனக்கிளர்ச்சி யுடையவனாக இருத்தல் அவசியம். இதனை ஆசிரியர் "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" என்றும் "கூறிய கிளவி பொருள்நிலையல்ல வேறுபிறதோன்றினும் அவற்றொடுங்கொளலே" என்றும் கூறுவார். இதனைத் தொல்காப்பிய உரையாசிரியர் தெய்வச்சிலையார் "வந்தது கொண்டு வாராதது முடித்தல்" என்பார்.

சிலப்பதிகாரம் ஒரு துன்பியல் காப்பியம்; கற்பவன் சிந்தனை - மனமும் மூளையும் - ஆழமான துன்பம் கவிந்த மன இறுக்கத்தோடு காப்பியத்தின் ஒவ்வொரு சொற்றொடரையும் சிந்தித்து மனம் கொள்கின்றான். புறஉலகத்தை மறந்து காப்பிய நிகழ்வுகளோடு ஒன்றி காப்பியத்தின் துன்பச் செய்தியை உள்வாங்கி அறிவு சார்ந்த துன்பியல் இன்பத்தைக் காண்கின்றான். இவை துன்பியல் நாடகத்திற்கும் இன்பியல் நாடகத்திற்கும் உள்ள வேறுபாடு.

அத்தகைய காட்சிகளை இளங்கோ எப்படிக் காட்சிப்படுத்தியுள்ளார். என்பதைப் பேராசிரியர் இரா.இளங்குமரனார் தன் நுன்தேர்ச்சி நுழைபுலத்தால் ஒருசில பக்கங்களில் வெளிக் கொணர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கற்பவர்கள் இந்தக் கட்டுரையை மூலமாக வைத்து பல தொகுதிகளை வரைந்து தங்களுடைய ஆய்வு உரையை நிறைவு செய்து பட்டம் பெறலாம் என்பதையும் பேராசிரியர் இளங்குமரனார் குறிப்பாக இறுதியில் குறிப்பிட்டிருப்பது மாணவர்கள் மனம் கொள்ளத்தக்கது.

பேராசிரியர் ப.மருதநாயகம் வீரசோழியம் உரையாசிரியர் அணியியலிலிருந்து எடுத்துக்காட்டும் மேற்கோள்கள் தண்டியலங்காரத்திலும் காணப்படுவது குறித்து இப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டுள்ளார். அறிஞர் மு.அருணாசலம், சோமசுந்தரதேசிகர், வை.மு.சடகோபராமானுசாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் அணியியல் குறித்த குறிப்பினையும் சிந்தனைக்கு எடுத்துள்ளார். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் அணியியல் நூற்பாக்களை மேற்கோளாகக் காட்டுகிறார். அந்த நூற்பாக்கள் தண்டியாலும் எடுத்தாளப்படுகிறது. இருபெரும் சான்றோர்களும் அணியியலிருந்து எடுத்தாண்டுள்ளனர். வீரசோழிய உரையில் இடைச்செருகல் நிகழ்ந்திருப்பதையும் பேராசிரியர் ப.மருதநாயகம் குறிப்பிட்டுள்ளது சிந்தனைக்குரியதாகும். பேராசிரியர் ஆழ்ந்த மதிநுட்பத்தாலும் பரந்த கல்வி நலத்தாலும் விரிந்துபட்ட பல்வேறு மேற்கோள்களை எடுத்துரைத்து கற்பவர்களுக்கு உண்மையை உணர்த்தும் பாங்கு அறிதோறும் இன்பம் பயப்பதாகும். பேராசிரியர் உலகம் முழுவதும் தொடர்ந்து பயணம் மேற்கொண்டு நுட்பமான செய்திகளைத் தேடி தாம் உணர்ந்த வண்ணம் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் செந்தமிழ் இதழில் தொடர்ந்து எழுதுவது காலங்களைக் கடந்து தமிழ் அறிஞர்களின் மனத்தில் நீங்கா இடம்பிடிக்கும்; பா.மருதநாயகம் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று வாழ்த்துவோம்.

முனைவர் நெல்லை ந.சொக்கலிங்கம் அவர்கள் “மொழிப்பற்று” என்னும் தலைப்பில் மு.வ.வின் சிந்தனைகள் குறித்து காலம் கருதி ஒரு கட்டுரை வடித்துள்ளார். தமிழியக்கம், மொழிப்பற்று என்பதை மொழி சார்ந்த செய்தியாகக் கொள்ளல் பிழை. மொழி என்பது தமிழகத்தில் வாழ்கின்ற மக்கள் இயக்கம்; அவர்கள் வாழ்வு சார்ந்தது. பாவேந்தர் பாரதிதாசன், பேரராசிரியர் மு.வரதராசனார், அறிஞர் அண்ணா போன்ற பெருமக்கள் தமிழியக்கம் என்பதை மக்கள் இயக்கமாகப் பார்த்தனர். சமுதாயக் கட்டமைப்பு, பொருளாதாரம், அரசியல் என்னும் பன்முகப் பார்வை கொண்டது. தமிழ்நாட்டில் தமிழ்வாழ்வு தமிழில் மலர்கின்றது என்பதை உறுதிபட எழுதினர். மேட்டுக்குடிமக்கள் மேல்நிலையில் இருப்பவர் வேறு வேறு மொழிச் சார்புடையவராகலாம். அது அவர்கள் வாழ்வை மேம்படுத்தும். தமிழியக்கம் தமிழகத்தில் உள்ள அன்றாடம் காச்சிகளை உயர்த்துவது. மேல்நிலை வர்க்கத்திடமிருந்து சாமனியர்கைக்கு ஆட்சி வரும் போது தான் தமிழகத்தில் மக்கள் வாழ்வில் அடிநிலையில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும். அதற்குரிய அறிவுத்தேடல் தமிழர்களுக்குத் தேவை.

செந்தமிழில் போற்றித் திருஅகவல் இருக்கும் போது கோயில்களில் சகத்ரநாமம் நுழைந்தது ஏன்? இதற்கு விடை காண்பதுதான் தமிழியக்கம். அதிகாரவர்க்கத்தை மாற்றியமைப்பது என்னும் உள்ளீடு அதனுள் உள்ளது. அந்த மாற்றம் வரும் நாள் தமிழர் நாள்.

பேராசிரியர் கத்தூரிராமசாமி, அணிகிளர் கலாவம் என்னும் தலைப்பில் சங்கத்தமிழில் புலவர் நாவில் மயில் இயலும் சாயலும் இடம் பெற்று பாடுபொருளாக அமைந்த அழகினை இயற்கையோடு இயைந்து ஒன்றித் திகழ்ந்து இயற்கைக் காட்சிகளைப் படைத்திருப்பது சுவைபட அமைந்துள்ளது. பேராசிரியர் அறிவியல் பேராசிரியர், தமிழ்ச்சுவை தேர்ந்த பெரும்புல்வரும் ஆவார். அவர்கள் செந்தமிழில் சங்க இலக்கியக் கட்டுரைகளை எழுதுவது வாசகர்களுக்கு மனநிறைவளிப்பதாகும். மயில் அமைதியான சூழலில் மரம் செடி கொடிகள் நிறைந்த தோட்டங்களில் இரவு நேரங்களில் மரங்களில் தங்கி பகலில் இரை தேடுகின்றன. அவற்றுக்கு மக்கள் தக்க பாதுகாப்பு அளிப்பது இன்றியமையாக்கடமையாகும். தீயவர்கள் அவற்றை வேட்டையாடாமல் பாதுகாப்பதும் அவை பற்றிய நல்லுணர்வை பரப்புவதும் மாணவர் ஆசிரியர் பொதுமக்கள் கடமையாகும். அழகுணர்ச்சி பற்ற மக்களின் வெறிச் செயலிலிருந்து உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டுணர்வு இன்றையத் தேவை.

பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் தொல்காப்பியம் குறித்த சொல்லியல் கோட்பாடு என்றும் மொழி இயல் சார்ந்த சிந்தனைத்தொடர் இம்மாதி கையிலும் இடம் பெறுகிறது. கற்று ஆராய்க.

நாலடியார் தெளிவுரை

இம்மை பயக்குமாம் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

முது முனைவர்
இரா.இளங்குமரனார்

6 சிலம்புப் புதையல்

காப்பிய உத்திகள்

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

கோவலன், கண்ணகியர் மணங்கொண்ட கொடைவிழாவில் தொடங்குகிறார்; அங்கேயே அவர்கள் பெற்றோரை அறிமுகம் செய்கிறார். **இளமைப்பருவத் தோற்றம் வளர்வுகளைக் கற்போர் பார்வைக்கு விட்டுவிடுகிறார்.**

மனையறம் படுத்தலில் கண்ணகியாரைக் குறியாக் கட்டுரை எனத் தொடங்கி, 43 அடிகள் வண்ணித்து உலவாக் கட்டுரையாய் முடிக்கிறார்!

இல்லற வாழ்வு எவ்வாறு நடத்தினர்? அதனைக் காட்டாமல்,

யாண்டு சில கழிந்தன இற்பெருங் கிழமையில்"

என்று ஓரடியில் முடிக்கிறார்! **90 அடி மனையறம் படுத்தலில் மனையறம் ஓரடி!** அடுத்துத் தொடுத்த வெண்பாவிலும் தொலையாத இன்பமே சுட்டினார். மனையறச் செய்தியைக் **கற்பார்க்கே விடுத்தார்!**

அடுத்துவரும் அரங்கேற்றுகாதையில் கலைத்திறங்களையெல்லாம் அரங்க அமைவு முதல் கொட்டுகிறார். மாதவி ஆடலை,

"நாட்டியநன்னூல் நன்கு கடைப்பிடித்துக்
காட்டினள்"

என்ற அளவில் முடிக்கிறார்! மன்னன் வழங்கிய மாலையை,

"மாலை வாங்குநர் சாலும்நம் கொடிக்கு"

எனக் கூனி கூற, மாலையை வாங்கிய கோவலன்,

"விடுதல் அறியா விருப்பினன் ஆகி
வடுநீங்கு சிறப்பின் மனையகம்" மறக்கிறான்!

கண்ணகியை வண்ணித்த வண்ணனைகளுள் ஒன்றுதானும் மாதவியைக் கோவலன் வண்ணிக்கவில்லை!

அடுத்துவரும் அந்திமாலை, கணவரொடு கூடியவர் - பிரிந்தவர் நிலை கூறுவதாய் ஊர்நிலை கூறுவதாக அமைகின்றது! மாதவி மகிழ்வோ, கண்ணகி கவல்வோ காட்டப்படவில்லை; ஊர்ப்பொதுமை நிலையில் ஒன்றுவித்து விடுகிறார்.

அடுத்து இந்திரவிழா, கடலாடல் பொது நிலைப்பாடுகளே!

கானல்வரியில் வரிப்பாடல்கள் பெருகவும், கோவலன்

கண்ணகியைக் கவவுக்கை நெகிழ்ந்ததுபோல், மாதவியைக் கவவுக்கை நெகிழ்ந்து இருவராய் வந்தவர்கள் ஒருவர் ஒருவராய்ப் பிரிகின்றனர்!

மாதவி தன்மனை செல்ல, கோவலன் தன்மனை செல்ல இடைவெளியில் மாதவி தந்த கடிதத்துடன் மாதவி தோழி **வசந்தமாலை** கோவலனிடம் வழங்க, தலைக்கோலி நிலையில் அரசும் குடியும் நோக்க **ஆடிய ஆட்டங்களையெல்லாம் அடுக்கிக்கூறி**

"ஆடல் மகளே ஆதலின் பாடுபெற்றன"

என்று மறுத்துச் செல்கின்றான்! ஆனால், கண்ணகியார் வதியும் வீடுசெல்லுமுன் அவர் கண்ட கனவையும், தேவந்தி கிளைக்கதையையும் கூறி, கணவனை அன்றிக் காமனைத் தொழல் பீடன்று என்று கண்ணகி தேவந்திக்கு உரைக்கும்போது, காவலன் போலக் கோவலன் எய்துகிறான்!

எய்தியவன் தங்கினானா?

"சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்
குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும்என,"

"சிலம்புள கொண்ம்" எனக் கண்ணகி கூற,

மதுரைக்கு, "ஏடலர் கோதாய் எழுக" என்று கூறி மதுரைக்குப் புறப்பட்டுவிட்டனர்! வந்தது விடிபொழுது! புறப்பட்டதும் அப்பொழுது! செல்லும் வழியில் **கவுந்தியடிகள்** தவமனை கண்டு, அவரை வணங்க, இக்கோடை வெப்பில் புறப்படலேன்? என வினவ,

"உரையாட்டில்லை" (சொல்வதற்கு இல்லை)

என்று கோவலன் கூற, அவர் "யானும் மதுரை செல்லும் எண்ணம் உடையேன்; உடன்வருவேன்" என்று அவர் கூற,

"தொடிவளைத் தோழி துயர் தீர்த்தேன்"

எனக் கோவலன் கூறிய அளவில்,

"கோவலன் காணாய் கொண்ட இந்நெறிக்கு
ஏதம் தருவன யாங்கும்பல கேண்மோ"

என்கிறார்! **கோவலன் சொல்லும் - கவுந்தியடிகள் சொல்லும் - எதிரது உணர்த்துவது அல்லவா!**

கவவுக்கை நெகிழாமல் என்றது,

கவவுக்கை நெகிழ்தலை ஈரிடங்களில் காட்டிய அடிகள், அவ்வுத்தியை இங்கேயும் ஆள்கிறார்.

நாடுகாண் காதை, காடுகாண்காதை தொடர்கிறது.

"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்பதைச் சாலினி, தெய்வமேறிக் கூறும் வாக்காக,

"இவளோ, கொங்கச்செல்வி குடமலையாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகுக் கோங்கிய
திருமா மணியென"

உரைக்கச் செய்கிறார். இது **வேட்டுவவரி**

வரிப்பாடல்களை வளமாக மீளப்பாடும் இடமாகக் கொள்கிறார். அடுத்தே துறவோர் உறையும் புறஞ்சேரியில் சேர்க்கு முன்னர்,

மாதவியார் கடிதம் கோசிகமாணி வழி எய்துகின்றது. **மாதவி தீதிலள் எனத் தெளிகிறான்**. "அவள்தீது இல்லை; **என்தீது**" என உணர்ந்து அக்கடிதத்தைத் தன் பெற்றோர்க்குத் தான் விடுக்கும் கடிதமாக விடுக்கின்றான்! **"ஒற்றைக் கடிதம் இரட்டைக் கடித நயம்"** உத்தியில் உயரிய உத்தியாம்!

புறஞ்சேரியில் தங்கிய கோவலன், கவுந்தியடிகள் முன்னே வினவியதற்கு **'உரையாட்டில்லை'** என்றவன்,

"நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகிச் சிறுமையுற்றேன்"

என்று தன் குற்றத்தைத் தானே எடுத்துரைக்கிறான். அவர் ஆறுதல் கூற, மதுரைக்குச் சென்று தெருச் சுற்றிக்கண்டு வருவதன்றி, **வணிக நோக்குடன் சென்ற காட்சி இல்லை.** மீண்டும் புறஞ்சேரி வருகிறான்.

அங்கே மாடல மறையோன் எய்துகின்றான். முன்னே கூறாது விடுத்த, **"மணிமேகலை பிறப்பு, கோவலன் கொடை நலம்"** என்பவற்றை விரியக் கூறுகிறான்!

அப்பொழுதில் கோவலன் அன்றிரவு தான் கண்ட கனவை எடுத்து உரைத்து, அத்தீய கனவு **'கடிதீங்குறும்'** (கடிது ஈங்குறும்; கடி தீங்குறும்) என்று கூற, அப்பொழுது ஆங்குவந்த **மாதிரியிடம்** கோவல கண்ணகியரை அடைக்கலப்படுத்துகிறார். அடுத்தே தொடர்வது கொலைக்களக்காதை.

அங்கேதான் கண்ணகியார் **உணவாக்குதலும் படைத்தலும்** கூறி, முன்னர் ஆக்கிய **அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கு எதிர்தல், விருந்தெதிர்கோடல்** என்னும் இல்லற மாண்பை வெளிப்படுத்துகிறார்! கோவலன் தன் குறையை ஒருமுறைக்கு மும்முறை கூறுவான் போலக்கூறி வருந்துகிறான். சீறடிச் சிலம்பில் ஒன்று கொண்டு புறப்படுகிறான்.

சிலம்பு, 'விற்று வாங்கும்' **வணிகரிடம் செல்லாமல், சிலம்பு செய்யும் கொல்லர் தலைவனை அணுகுகிறான்!** கொலை செய்யவும் படுகிறான். **அற்றை இரவு அவன் மீளவில்லை;** பால் உறையாமை முதலிய குறிகளால் ஆய்ச்சியர் குரவையாடித் தெய்வம் பரவுகின்றனர். கோவலன் கொலையுண்ட செய்தி கிட்டுகின்றது. **துன்பமாலை, ஊர்சூழ்வரி, வழக்குரைகாதை, வஞ்சினமாலை, அழற்படுகாதை, கட்டுரைகாதை** என்பன தொடர்கின்றன. மதுரைக்காண்டம் முடிகின்றது.

"காலைவாய், கணவனைத் தழுவியவள்
மாலைவாய், அவன் தன்னைக் காணாக் கடுதுயரம்"

என்பதால் **அன்றே நிகழ்ந்ததுபோல் காட்டி, ஒருநாள் ஊடே கழிந்தமை மறையுண்டது** உணர வைக்கிறார்.

"கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென"

வையை ஒரு கரை பற்றி வேலான் குன்றடைந்த நிலையில், தம் செயலை எண்ணித், **"தீத்தொழிலாட்டியேன் யான்"** என்று கூறி, பதினான்காம் நாள் விண்ணகம் புகுந்தார் கண்ணகி.

கண்ணகி விண்ணகம் புகுந்ததைக் கண்முன் கண்ட குன்றக்குறவர், **"இவள்போலும் தெய்வம் நம் குலத்துக்கு இல்லை"** என்று குன்றக்குரவை ஆடினர்.

மலைவளம் காணத் தேவி பரிவாரங்களுடன் செங்குட்டுவன் வரக்கண்ட குன்றவர், கண்ணகியார் செய்தியை உரைக்க, உடனிருந்த கூலவாணிகன் சாத்தனார் மதுரையில் நிகழ்ந்ததை உரைக்க, தேவியின் விருப்பப்படி செங்குட்டுவன் வடநாட்டுச் செலவு மேற்கொண்டு கல்லெடுத்து வந்து கடவுள் மங்கலம் செய்ய ஆயவற்றை, **காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்து எனத் தொல்காப்பியர் வகுத்த வீரவழிபாட்டு நிலையை நிறுவி, வரந்தருகாதை** என நூலை நிறைவு செய்யுமுன், தம் வரலாற்றைத் தேவந்தி வாயிலாகக் கூறச்செய்து, "இக்கதை கேட்டவர் இவ்வாறு ஒழுகுக" என அடுக்கிக் கூறிக் காப்பியத்தை முடிக்கிறார்.

நிகழ்ந்தது நிகழ்ந்த காலவரிசையில் கூறாமல், மாற்றியும், மறைத்தும் இணைப்பன இணைத்தும், கனவும் கிளைக் கதைகளும் எனச்சேர்த்தும் உரைத்தமை காப்பிய உத்தியாம்!

தனி நூலாக வேண்டியது கட்டுரையளவில் சுருங்கியது இஃதாம்.

வீரசோழியம்

பேராசிரியர் **ப.மருதநாயகம்**
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல்
தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை 600113.
கைபேசி : 9442787727

சென்ற இதழின் தொடர்ச்சி

சிலப்பதிகாரவுரையில் அடியார்க்கு நல்லார் உரைப்பாட்டு மடையின் இறுதியிலும் மனையறம் படுத்த காதை 27ஆம் அடியின் உரையில் உதாரம் என்னும் அலங்காரத்துக்கு ஆதாரமாகவும் இரண்டு நூற்பாக்களைக் காட்டி அவை அணியியலில் உள்ளவையென்று எழுதுவார். இவ்விரண்டு நூற்பாக்களும் தண்டியலங்காரப் பொதுவணி இயலுள் எடுத்தாளப்பெறுகின்றன.

இத்தகைய மேற்கோள்களைச் சுட்டிக்காட்டும் அருணாசலம் தமிழிலிருந்த பண்டை **அணியியல்** நூல் 27 அணிகளை விளக்கியிருக்க வேண்டுமென்றும் செய்யுள் வகைகளையும் அது ஆராய்ந்திருக்க வேண்டுமென்றும் பருவ வருணனை கூறியமையால் காப்பிய இலக்கணமும் அதில் சொல்லப்பட்டிருக்க வேண்டுமென்றும் அதற்கோர் உரையும் இருந்ததென்றும் புலப்படுத்துவார்.

வடமொழியில் உள்ள காவியாதரிசத்திற்கு 13 உரைகள் உள்ளன என்றும் 2 உரைகள் தமிழரால் செய்யப்பட்டன என்றும் அவ்வுரைகளில் தமிழ்த்தொகை நூல்கள் சான்றுகளாகக் காட்டப்பட்டுள்ளன என்றும் ஆய்வாளர் கூறுவர்.

தமிழ்த்தண்டியலங்காரத்திற்கே அணியியல் என்ற பெயர் வழங்கியிருக்கலாமென்பதை மாறனலங்கார ஆசிரியர் பாயிரவுரையுள் 'குணம் தொழில் சாதி' என்ற தண்டியலங்கார நூற்பாவைத் தந்து (39) 'என்பது அணியியலாகலின்' என்றெழுதுவதால் அறியலாம்.

இந்நூலுக்கு அணியதிகாரம் என்ற பெயர் இருந்தமையைத் தற்சிறப்புப் பாயிரத்தை அடுத்த உரைப்பகுதியில்

'இவ்வதிகாரம் என்ன பெயர்த்ததோ எனின் அணியிலக்கணம் உணர்த்தினமையான் அணியதிகாரம் என்னும் பெயர்த்து'

என்று வருவதால் உணரலாம். எனவே இது முதலில் **அணியியல்** என்றும் பின்னர் **அணியதிகாரம்** என்றும் அதன் பின்னர் **தண்டியலங்காரம்** என்றும் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். **தண்டியலங்காரம்** மொழிபெயர்ப்பு நூலென்றால் அதன் முதல் நூலை ஆசிரியர் எங்கேனும் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய குறிப்பு ஏதுமில்லாமையை இருமொழிகளும் அறிந்தார் ஒப்புக்கொள்வர்.

IX

காவ்யாதரிசத்தையும் தண்டியலங்காரத்தையும் ஒப்பிட்டுக் காட்டும் வை.மு.சடகோபராமானுசாச்சாரிய சுவாமிகள் தமது தண்டியலங்காரப் பதிப்பில்,

> ஒருமொழியினின்றும் மற்றொரு மொழிக்கு ஒன்றை மொழி பெயர்த்துக்கொண்டு போகும்போது முதல் நூலிலுள்ள செறிவும் பொலிவும் அழகும் நயமும் பெயர்ப்பாகிய வழி நூலில் குறைவுபடுதல் உலகில் பெரும்பான்மை. இந்நூலின் மொழிபெயர்ப்பு அக்குறைபாட்டுக்குச் **சிறிதும்** இடமில்லாதபடி அமைந்து வேறொரு தனி நூல் போலவே விளங்குதல் இம்மொழிபெயர்ப்பாசிரியரது வியக்கத்தக்க திறத்தை நன்கு விளக்கும். இத்தன்மை, இரு மொழியும் வல்லுநராய் இந்நூலை முதல் நூலோடு ஒப்பிட்டு நோக்குவார்க்குத் தானே விளங்கும்

என்று கூறுவார். ஆனால் அவ்வறிஞர் **காவ்யாதரிசம்** என்னும் வடநூல் தண்டியலங்காரம் என்னும் தமிழ் நூலின் மொழிபெயர்ப்பாக இருக்கலாமா என்பது பற்றிய ஐயத்தை எங்கும் எழுப்பவில்லை!

தண்டியலங்காரம் பொதுவணியியல் பொருளணியியல் சொல்லணியியல் என்ற மூன்று இயல்களையும் 125 நூற்பாக்களையும் கொண்டது. அணிக்கு எடுத்துக்காட்டாக, 350க்கும் மேற்பட்ட செய்யுட்கள் இடம்பெறுகின்றன. இவையாவும் வெண்பாக்கள். இச்செய்யுட்களைத் தண்டி ஆசிரியரே செய்தார் என்று அறிஞர்கள் ஒப்புக்கொள்வர். வீரசோழிய ஆசிரியரான புத்தமித்திரனார் தாமே உதாரணச் செய்யுட்களைச் செய்து கொண்டார் என்று யாரும் சொல்வதில்லை. “தண்டியலங்காரத்தின் முதலியலானது பொதுவியல், செய்யுள் நெறியியல், செய்யுள் அணியியல் என்றும் பெயர் பெறுவதுண்டு” என்பது அருணாசலத்தின் கூற்று.

வீரசோழிய உரையாசிரியர் காட்டும் மேற்கோட்பாடல்கள் தண்டியிலும் காணப்படுவதால் தண்டியிலிருந்து வீரசோழிய உரையாசிரியர் பாடல்களை எடுத்துக்கொண்டாரென்பது சோமசுந்தரதேசிகரின் ஆய்வுமுடிவு. இதை மறுக்கும் அருணாசலம், வீரசோழியம் காட்டும் செய்யுட்கள் அவ்வாசிரியர் காலத்து வழங்கிய பழம்பாடல்கள் என்றும் அவற்றைத் தண்டியாசிரியர் தாமும் எடுத்தமைத்துக்கொண்டார் என்றும் கூறுவார். தண்டியலங்கார நூலையும் உரையையும் வீரசோழிய நூலாசிரியரும் உரையாசிரியரும் எடுத்தாண்டுள்ளனர் என்றும் அவ்விருவரும் ஒரே காலத்தினர் என்பது அறிஞர் பலர் ஒப்புக்கொண்ட செய்தியென்றும் தேசிகர் புலப்படுத்துவார்.

தண்டியலங்காரத்தின் சிறப்புப்பாயிரச் செய்யுள் அதன் ஆசிரியரைப்பற்றி,

வடதிசை யிருந்து தென்மலைக் கேகி
மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை
இருந்தவன் தன்பால் அருந்தமிழ் உணர்ந்த
பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த
தொல்காப்பிய நெறி பல்காப்பியத்தும்
அணிபெறும் இலக்கணம் அரிதினில் தெரிந்து
வடநூல் வழிமுறை மரபினில் வழாது
ஈரிரண்டு எல்லையின் இகவா மும்மைப்
பாரத விலக்கணம் பண்புறத் தழீஇத்
திருந்திய மணிமுடிச் செம்பியன் அவையத்து
அரும்பொருள் விளங்க யாப்பின் வகுத்தனன்;
ஆடக மன்றத்து நாடக நவிற்றும்
வடநூல் உணர்ந்த தமிழ் நூற்புலவன்
பூவிரி தண்பொழில் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரியல் அம்பிகா பதி
மேவரும் தவத்தினில் பயந்த
தாவரும் சீர்த்தித் தண்டி என்பவனே.

இப்பாடலால் தண்டியலங்கார ஆசிரியர் தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு இவ்வணியிலக்கணத்தைத் தமிழில் செய்தாரென்பதும், செம்பியன் அவையத்தில் அதனை அரங்கேற்றினார்

என்பதும், காவிரி நாட்டு அம்பிகாபதியின் மகன் என்பதும் தில்லை மன்றத்து நாடகம் நவிற்றுபவர் என்பதும் பெறப்படும்.

பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாறன் அலங்காரம் என்னும் நூல் தண்டியலங்காரத்தை முதல் நூலாகக் கொண்டது. அதன் சிறப்புப்பாயிரம்,

பரத கண்டத்துப் பழம்பதி எனப்புகும்
விண்தொட நிவந்த பொழில்வட வேங்கடம்
தெண்திரை கறங்கு தென்குமரி என்றாயிடை
அமிழ்தினும் வான்சுவைத் தாகிய மும்மைத்
தமிழ்தெரி புலமைச் சான்றோர் மதிக்கும்
முதுமொழித் தெண்டி முதல்நூல் அணியொடும்
புதுமொழிப் புலவர் புணர்த்திய அணியையும்
தனாது நுண்ணுண வால் தருபல அணியையும்
மனாதுறத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும்

என்றெல்லாம் தண்டியலங்கார ஆசிரியரைப் பாராட்டிக் கூறும் மாறனலங்கார உரையாசிரியர் இவரை 'முதனூல் செய்த தெண்டியாசிரியர்' என்றே குறிப்பிடுவார். பிரயோக விவேகநூலார் தண்டியாசிரியர் நூற்பாவும் செய்து உரையும் உதாரணமும் எழுதினார் என்று கூறுவார்.

தண்டியென்ற சொற்பொருள் விளங்கவில்லையென்று கூறும் அருணாசலம் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் குருடரான ஒருவர் தண்டியடிகள் என்றும் சண்டேசநாயனார் தண்டி எனவும் வழங்கப்படுகிறார் என்றும் குறிப்பிடுவார்.

இச்சான்றுகளால் தண்டியலங்காரம் எழுதிய தண்டியென்பவர் வரலாற்றுப் பாத்திரம் என்பதையும் அவரது நூல் தொல்காப்பியத்திற்குக் கடன்பட்டிருக்கிறதேயன்றி எந்த வடநூலுக்கும் கடன்பட்டதாகத் தண்டியலங்காரமோ அதன் உரையோ மாறன் அலங்காரமோ அதன் உரையோ குறிப்பிடவில்லையென்பதையும் வடநூலாகிய காவிய தர்சமே பழந்தமிழ் நூலாகிய **அணியியலையோ** தண்டியலங்காரத்தையோ தழுவியெழுதப்பட்டதென்பதையும் தெளிவாகப்புரிந்து கொள்ளலாம். வீரசோழிய அலங்காரப்பகுதியும் அதன் உரையும் அணியியலுக்கோ, தண்டியலங்காரத்திற்கோ கடன்பட்டிருக்க வேண்டுமேயன்றிக்

காவியதர்சத்திற்கு அன்று என்பதும் புலனாகும். பழந்தமிழ் நூலெதையும் தழுவியோ, மொழிபெயர்த்தோ வடமொழி நூல் ஒன்று எழுதப்பட்டிருக்குமாயின் அதுவே மூல நூலென்றும் தமிழ்நூல் தழுவலென்றும் அடித்துக்கூறுவது வடமொழிப் பற்றுடையார் வழக்கம் என்பதற்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல சான்றுகள் உண்டு.

தமிழ்மொழி இலக்கணத்திலும் இலக்கியத்திலும் ஆரியத்திற்கு நிகரெனக் காட்டும் வீரசோழியம் புத்தசமயச் சார்புடையது என்பதில் ஐயமில்லை. பாயிரத்தின் இரண்டாவது பாடல்

"ஆயும் குணத்து அவலோகி தன் பக்கல் அகத்தியன் கேட்டு...
தண்தமிழ்" என்றே தமிழைப் பாராட்டுகிறது.

ஆயும்குணத்து அவலோகிதன் பக்கல் அகத்தியன் கேட்டு
ஏயும் புவனிக்கு இயம்பிய தண்டமிழ் ஈங்குரைக்க
நீயும் உளையோ வெனில் கருடன் சென்ற நீள்விசும்பில்
ஈயும் பறக்கும் இதற்கு என்கொலோ சொல்லும் ஏந்திழையே

வீரசோழியத்தின் எண்பத்துமூன்றாவது நூற்பா தமிழை, "ஆயிரம் விதத்தில் பொலியும் புகழ் அவலோகிதன் மெய்த்தமிழே" என்று அழைக்கிறது.

வீரசோழியம் ஒரு பௌத்தரால் இயற்றப்பட்டதென்பதாலும், அது புத்தரைப் பலவிடங்களில் பாராட்டுவதாலும் சிங்களவர்களால் இது பயிலப்பட்டதென்றும், பதின்மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சிங்கள இலக்கண நூலாகிய **சித்தசங்கக** (சித்தாந்த சங்கிரகம்), வீரசோழியத்திலிருந்து சில இலக்கண நெறிகளை எடுத்துக்கொண்டதாக அந்நூலாசிரியரே கூறுகிறாரென்றும் அறிகிறோம்.

சோழர் காலத்தில் தமிழகத்தில் தமிழ், சமஸ்கிருதம், பாலி ஆகியவை பெற்றிருந்த நிலை பற்றி இராசாராம் கூறும் வரலாற்றுச் செய்தி நாம் அறிய வேண்டிய ஒன்றாகும்.

> சோழர்காலத்தில் பாலிமொழி பொதுமக்கள் பேச்சு வழக்கிலோ, பௌத்த சமயத்தைச் சார்ந்த சாதாரண மக்களிடையேயோ பயன்பாட்டில் இல்லை... தமிழ்நாட்டில் அக்காலத்தில் பௌத்த மகாதேரர்கள் தம் சமயக்குழுவை இனம் காணும் வகையில் தம்மிடையே அவ்வப்போது பாலிமொழியைப் பேசி வந்தனர்.

இனம், சாதி என்னும் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இத்தேரர்கள் பாலிமொழியைத் தம் அடையாளமாகக் கொண்டிருந்தனர். பொதுமக்கள் தொடர்பு மொழியாகத் தமிழை இவர்கள் பயன்படுத்தினர். புத்த பெருமானின் கருத்துகளைப் பரப்ப எண்ணிய இவர்கள் பாலிமொழியைப் புகுத்த விரும்பியதில்லை. மக்கள் மொழியிலேயே சமயக்கருத்துகள் எடுத்துரைக்கப்பட வேண்டும் என்னும் கருத்துடையவர்களாக இருந்தனர். அக்காலத்தில் வைதீக பிராமணர்கள் சமயக் கருத்துகள் சமஸ்கிருத மொழியிலேயே கூறப்படவேண்டுமென்றும் வேதங்கள் பிராமணர்களுக்கு மட்டுமே கற்பிக்கப்பட வேண்டும், பிராமணர் அல்லாதார் வேதங்களைப் பார்ப்பதும் பாவம் என்றும் கருத்துடையவராய் இருந்தனர். இவர்கள் நடுவே பௌத்தர்களும் சமண சமயத்தினரும் தமிழ்ப்பற்றாளர்களாக விளங்கினர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். ஒருசமயம், பௌத்த சமயத்தைச்சேர்ந்த இரு பார்ப்பனத் துறவிகள் புத்தர் பெருமானிடம் சென்று பௌத்தக் கொள்கைகளைப் பரப்ப உலகெங்கும் ஒரே மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினர். பௌத்தத்தேரர்கள் அந்தந்த நாட்டு மொழிகளில் பௌத்தக் கொள்கைகளைக் கூறி வருவதால் கருத்துகள் சிதறுண்டு போகும் பாவம் நிகழ்கிறது. எனவே பௌத்த சமயக் கருத்துகளைச் சமஸ்கிருதத்தில் எழுதி சமஸ்கிருத மொழியிலேயே அவை பரப்பப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அதற்குப் புத்தர்பெருமான் தமது வாய்மொழிகளை அவரவர் தாய்மொழியிலேயே போதிக்கவேண்டும் எனக்கூறினார். ‘சுல்லவக்க’ என்னும் பௌத்த நூலில் இச்செய்தி காணப்படுகிறது. (பக்.70-71)

வீரசோழிய உரையாசிரியர் ஓரிடத்தில் “தமிழ்ச் சொல்லிலக் கணத்துக்கு எல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்” என்று கூறுகின்றாராயினும் அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பெரிதும் போற்றியவரென்பதையும் அவையே வடமொழி இலக்கண இலக்கியங்களைவிடச் சிறப்புடையவை என உறுதியாக நம்பினாரென்பதையும் உரைதரும் சான்றுகளால் அறிய முடியும். வடநூலே தாயென்ற கூற்று இடைச்செருகல் என்று உணர்க.

செய்யுளுக்கு ஓசை என்பது பற்றிக் குறிப்பிடும்போது "நாலுபாக்களுக்கு நால் ஓசை என்று கூறுபடுத்து, வெண்பாக்களுக்குச் செப்பலோசை என்றாக்கி அதனை அலகிட்டு ஓசையூட்டுக என்று இலக்கணம் சொன்னார். ஓசையாவது செவிப்புலனே கருவியாக அறிவது என்பது எல்லார்க்கும் உடம்பாடு ஆதலால்" என்றும்

"வடநூற் புலவர்க்கு ஓசையூட்டுக என்பதில்லை எனக்கொள்க. மேலும் அவர் பயில்வார்க்கு அரிதாக நூலைப் பெருக்குவதும் செய்து, அப்பெருமையின் வாய்ப்புக்களை அடக்க மாட்டாதே மிக்கும் குறைந்தும் வரினும் ஒரு புடை ஒப்புமைநோக்கி ஒழிந்தவும் கொளல் என்று சூத்திரம் செய்தமையால் அடங்கவும் செய்திற்றிலர், பயில்வார்க்கு எளிதாகச் சுருங்கவும் செய்திற்றிலர், யாப்பதிகாரத்தினால் பயனும் செய்யுளுக்கு ஒரு ஏதுவேயாதலால் குற்றமென்க" என்றும் எழுதுவதால் அவர் வடமொழி இலக்கணத்தினும் தமிழ் இலக்கணம் செம்மை பெற்றது என்று கருதுவதை உணரலாம்.

ஆரியம், வடுகு, சாவகம், தெலுங்கு, சோனகம், சிங்களம், பப்பரம் போன்ற பிறநாட்டுச் சொற்களைத் தமிழாக்குவது எப்படியென்பதைக் காட்டுவதால் அம்மொழிகளையெல்லாம் அவர் அறிந்திருந்தமை புலனாகும்.

"இவர் எங்கும் தமிழ் மரபைப் போற்றி எழுதுவது பாராட்டற்பாலது" என்பார் அருணாசலம்.

ஐந்திணை ஒழுக்கம் பற்றி,

"நடையாவது ஒழுக்கம். இப்பாட்டு எந்நடை பற்றி வந்ததென்றால் இந்நிலத்துள் ஒழுக்கம் பற்றி வந்தது என்றறிவது" என்று கூறுவதோடு, குறிஞ்சி நடையியல், நெய்தல் நடையியல், பாலை நடையியல், மருதநடையியல், முல்லை நடையியல் என்று ஒவ்வொரு திணையையும் 14, 29, 33, 39, 37 அடிகள் கொண்ட நீண்ட அகவற்பாக்களால் துறைகள் கூறி விளக்குவார். மெய்ப்பாடு 64 அடிகளிலும் உவமை 80 அடிகளிலும் விளக்கம் பெறுகின்றன.

ழ, ள, ற, ச என்று எழுத்துக்களைச் சில இடத்து மக்கள் பிழையாக உச்சரிக்கிறார்கள் என்று காட்ட வந்தபோது 'அறிவில்லாதார் தமிழைப் பிழைக்க வழங்குவர்' என்று கூறி, கருநிலம் சுற்றின தேசம் (கருநடம்), காவிரி பாய்ந்த நிலம், பாலாறு பாய்ந்த நிலம் என்று குறிப்பிடுவார்.

ஒரு காரிகை (144) உரையில் 'வழக்கதிகாரத்தோடும் பொருந்தித் தமிழினோடும் கூடி வடவெழுத்தைத் தவிர்ந்து பெரிதும் இன்பம் தந்து, பெரியோரால் செய்யப்பட்ட செய்யுட்களினும் வந்து' என்றெழுதுவார்.

பெருந்தேவனார் நமக்குத் தெரிந்துள்ள பல பழந்தமிழ் நூல்களிலிருந்தும், நமக்குத் தெரியாத பலவற்றிலிருந்தும் சுவையான பாடல்கள் பலவற்றை மேற்கோள்களாகத் தருகிறார். இத்தகைய அரிய பாடல்களை வடநூல்களில் காண இயலாது. குறுந்தொகை, கலித்தொகை போன்ற சங்க நூல்களும், திருக்குறள், நாலடி, நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, நானாற்பது போன்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும், முத்தொள்ளாயிரமும், அப்பர்தேவாரம், இளம்பெருமாள் அடிகள் பாடிய சிவபெருமான் திருமும்மணிக்கோவை ஆகிய திருமுறைகளும், சூளாமணி, குண்டலகேசி, குண்டலகேசி விருத்தம், கிளிவிருத்தம், எலிவிருத்தம், நரிவிருத்தம், உதயணன் கதை, பெருந்தேவனார் பாரத வெண்பா போன்றவையும் உரையாசிரியர் சுட்டும் மேற்கோள் நூல்கள். இப்பட்டியல் இவர் தமிழிலக்கியக் கடலில் மூழ்கித் திளைத்தவர் என்பதையும் எது நல்ல கவிதை என்பதை உணர்ந்தவர் என்பதையும் புலப்படுத்தும்.

துணைநூல்கள்

இராசாராம், சு.**வீரசோழிய இலக்கணக்கோட்பாடு**

நாகர்கோவில்: இராகவேந்திரா, 1992

அருணாசலம். மு.**தமிழ் இலக்கிய வரலாறு: பன்னிரண்டாம் நூற்றாண்டு, இரண்டாம் பாகம்**.

சென்னை: தமிழியல் ஆய்வு நிறுவனம், 1973.

கா.ர.கோவிந்தராச முதலியார், பதிப்பாசிரியர், புத்தமித்திரனார் இயற்றிய **வீரசோழியம்** (பெருந்தேவனார் இயற்றிய உரையுடன்).

திருநெல்வேலி: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1970

Peter Schalk, ed. **Buddhism Among Tamils in Tamilakam and I lam.**

Uppsala: Uppsala University, 2013.

சொல்லியல் கோட்பாடு

பேரா **செ.வை.சண்முகம்**
மொழியியற்புலம் (ப.நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.
கைபேசி : 98651 96476

சென்ற இதழின் தொடர்ச்சி

4) மொழி வழக்கை செய்யுளாறு/ வழக்காறு (பேச்சு வழக்கு) என்பதை (வழக்காறல்ல செய்யுளாறே (கிளவி.18) என்று பல இடங்களில் குறிப்பிட்டுள்ளதே மொழி பயன்பாட்டில் இரண்டு துறை வழக்குகள் (registers) இருப்பதாகக் கொள்ளப்படுகிறது. தொல்காப்பிய கருத்துப்படியே சிறப்பொருமை (ஒருவரைக் குறிக்க அவர், தலைவர் என்று பன்மை வடிவத்தால் குறிப்பது) பேச்சு வழக்கே, செய்யுள் வழக்கே.

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கினாகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல (கிளவி.27)

என்பது தொல்காப்பிய சூத்திரம்.

செய்யுள் ஈட்டச் சொற்கள்

5) செய்யுள் ஈட்டச்சொற்களாகக் கூறப்பட்ட இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற வகையும் பொது மொழியியல் நோக்கிலும் முக்கியமானது. இயற்சொல் என்பது மொழியியலில் தகு வழக்கு (standard dialect) என்று குறிப்பிடப்படுகிறது. அதன் நிலப்பகுதியால் ‘செந்தமிழ் நிலத்து வழக்கு’ என்று கூறியது வட்டாரமே ‘செந்தமிழ் நிலம்’ என்று அழைக்கப்படும். அதை ஒட்டி ‘கொடுந்தமிழ்’ என்று உண்டாக்கப்பட்டு திசைமொழி அதாவது கிளைமொழி நிலமாகக் கருதும் கருத்து தோன்றியது.

திரிசொல் என்பது செய்யுளுக்கே அதாவது இலக்கிய மொழிக்கே உரிய வழக்கு என்பது இளம்பூரணர் கருத்து. ‘திரிசொல் செய்யுட்கே உரிய... ஒழிந்த மூன்றும் வழக்கிற்கு உரியவாகிச் செய்யுட் புகும்’ என்றும்; திரிசொல் என்பது செய்யுள் இன்பம் நோக்கியது இளம்பூரணரின் வாசகம். அதை ஒட்டி திரிசொல் விரிந்த ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. இலக்கிய மொழியியலில் இலக்கிய மொழியின் ஒரு சிறப்புப்

பண்பாகத் திரிசொல் கருதப்பட்டு அதன் கருத்தாக்கம் விரிவாக்கப்பட்டுள்ளது. (சண்முகம், 2018)

திசைச்சொல் என்பது மொழியியலில் வட்டாரக் கிளைமொழியியல் என்று குறிப்பிடப்படுகிறது. அதை விளக்கும்போது 'பன்னிரு நிலம்' (எச்சம்.4) என்பதால் 12 வகை வட்டாரம் இருப்பதாகக் குறிப்பிட்டு விளக்கியுள்ளார்கள். தொல்காப்பியம் புணரியலில் உறழ்ச்சியாகக் கூறியவை வட்டார வழக்குகளாகக் கருதத் தகுந்தவை (தேன் என்ற சொல்லின் மாற்று வடிவம், விளக்கம் பின்பகுதியில்).

வடசொல் என்பது வரலாற்று நோக்கு உடையது. அது வடமொழி, பாலி, பிராகிருதம் என்ற மொழிகளைக் குறிப்பதாகவே கொள்ளப்படுகிறது. அதைப் பிற மொழிச் சொற்கள் என்று மொழியியல் நோக்கில் பொதுமைப்படுத்தலாம். வரலாற்று மொழியியல் நோக்கில் கடனாக்கம் (borrowing) என்று குறிப்பிடப்படுகிறது.

6) அவைகளுக்கு மேலாக செய்யுள்ஈட்டச் சொற்களாக தொல்வழக்கு (Archaic dialect), என்று இருப்பதையும் தொல்காப்பியமே 'தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே' (உயிர் மயங்கியல் (35), 'தொல்லியல்' (வழக்கு) (புள்ளி மயங்கியல் 71,) என்று கூறியவைகளால் உணரலாம். அது இலக்கிய மொழியியலில் செய்யுள் ஈட்டச் சொல்லின் ஐந்தாவது வகையாகக் கருதப்படுகிறது.

பாரதியார் பாடலில் -அம் என்பது தன்மைப் பன்மை விகுதியாக வந்துள்ளது 'சரி நிகர் சமானமாக **வாழ்வம்** இந்த நாட்டிலே' தெரிகிலன் யான்' (குயில்பாட்டு) என்ற தொடரும் தொல் வழக்கு என்ற வகையில் அடங்கும்.

7) 'இழிந்தோன் கூற்று' (எச்சம்.49), 'ஒப்போன் கூற்று' (50), 'உயர்ந்தோன் கூற்று' (51) என்று சொல்லதிகாரத்தில் கூறியவை சமூகக் கிளைமொழி வழக்குகள் (*Social dialects*) என்ற இன்னொரு வகையும் செய்யுள் ஈட்டச் சொல்லின் ஒரு கூடுதல் வகையாகக் கருதலாம்.

8) இசைத் தமிழில் எழுத்துகளின் மாத்திரை 'அளபிறந்து இசைத்தல்' (நூன்மரபு33) என்பது துறை வழக்குகளில் (registers) ஒன்று.

மொழியியல் திறனாய்வு எழுத்து, சொல் அதிகாரங்களில் விளக்கப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையில் சமூகக் கிளைமொழி, தொல்வழக்கு, துறை வழக்கு ஆகிய மூன்றும் தொல்காப்பியம் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகக் கூறிய 'மரபு' என்ற கூறில் அடக்கலாம் என்று கருதப்படுகிறது (சண்முகம், 2014: 42-46).

சொல்லியல்

1. சொல் பற்றிய பொது விளக்கம் பெயரியலில் முதல் மூன்று சூத்திரங்களில்

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (பெயர்.1),

'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும்...' (2)

'பொருண்மை தெரிதலும் குறிப்பில் தோன்றலும்
இருபாற்று என்ப பொருண்மை நிலையே (3)

என்பவை அவை உலகப்பொதுமை ஆனவை. இங்கு இரண்டாவது சூத்திரம் சொல் தன்னை அறிவித்தல் என்பது எழுத்தை அறிவித்தல். நிலம் என்ற சொல்லின் பொருளையும் நிலம் சொல் வடிவத்தையும் குறிக்கிறது. இலக்கண நிலையில் நிலம் என்ற சொல் என்று குறிப்பிடப்படும், அது கருவி மொழி (Meta language) இலக்கண மொழி என்று ஆகும்.

மூன்றாவது சூத்திரத்தில் உள்ள 'குறிப்பில் தோன்றல்' என்பது கருத்தாடலுக்கு அதாவது வாக்கியத்தைத் தாண்டிய நிலைக்கும் பொருந்தும். அதனால்தான் உரையாசிரியர்கள் 'கற் கறித்து, நன்கு அட்டாய்' என்ற உதாரணத்தைக் கொடுத்துள்ளார்கள். அது பொருள் எச்சம் ஆகும். (பொதுவாக சொல்லியலில் நேர்ப்பொருள் பற்றி மட்டுமே பேசப்படும்.

நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒரு மொழி (மொழி மரபு, 10),

குற்றெழுத்து ஐந்தும் மொழி நிறைபு இலவே (11)

ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொரு மொழி,
இரண்டிறந்து இசைக்கும் தொடர் மொழி உளப்பட
மூன்றே மொழி தோன்றிய நெறியே (12)

ஆகிய மூன்று மொழியியல் சூத்திரங்களும் உருபனின் எழுத்து அடிப்படையிலான வகைப்பாடு. முதல் இரண்டு சூத்திரங்களும் தமிழுக்கே உரியது. மூன்றாவது உலகப் பொதுமையான உருபனின் எழுத்து அடிப்படை பாகுபாடு என்று கொள்ளலாம். அதுபோல

வேற்றுமை வழிய பெயர் புணர்நிலையே (புணரியல் 14),

'பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றாது
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங்கடையே' (வேற்றுமையியல் 9).

'வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது

நினையுங் காலை காலமொடு தோன்றும்' (வினையியல்.1)

என்ற சூத்திரமும் உலகப் பொதுமையானவை. அதனால் மீனாட்சிசுந்தரனார் (1961:115) உலகப் பொதுமையான கூறுகள் தொல்காப்பியத்தில் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சொல்லியல் ஆய்வு

சொல்லியல் ஆய்வு முறைகளாக மேலே கூறிய கருத்துகளின் அடிப்படையில் தொல்காப்பியத்தை விளக்குவதோடு மதிப்பிடவும் செய்யப்படுகிறது.

பகுப்பு

வேற்றுமை உருபு, சாரியை, வினைச்சொல்லில் திணை/பால் உருபு ஆகியவை உருபுகள் தொல்காப்பியம் பகுத்துள்ளது. அவைகளில் சாரியையின் சொல்லியல் சிறப்பானது.

ஆனால் 'வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது / நினையும் காலை காலமொடு தோன்றும்' (வினை.1) குறிப்பிட்டாலும் கால விகுதியைப் பகுத்துக் கூறவில்லை. விரவுவினைகளில் குறிப்பிடப்பட்ட வியங்கோள் வினையெஞ்சு கிளவி ஆகியவைகளுக்கு உரிய விகுதிகள் குறிப்பிடப்படவில்லை. பெயரெச்சத்தைப் பொறுத்த வரையில் அதன் சொல்லியல் வடிவத்தை செய்யும், செய்த என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அவை சொல்லியல் பகுப்பாய்வு செய்யப்படவில்லை.

அவை சொல்லியல் நோக்கில் உருபன்களின் வகை கண்டறிந்து அவைகளின் வடிவம் அதாவது அவைகளின் எழுத்துகள் காணப்படவில்லை என்று பொருள்.

பகுக்காமை

தொல்காப்பியர் வினைச்சொற்களில் திணை பால் உருபன்களாகக் கூறியவைகளில் சில உருபன்களில் கால உருபனும் சேர்ந்துள்ளது அறியத்தகுந்தது.

கிளவியாக்கத்தில் பலர்பால் உருபன்களாக (7)

ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்

மாரைக் கிளவியும் உளப்பட மூன்றும்

நேரத் தோன்றும் பலரறி சொல்லே

வினையியலில் (9)

அர், ஆர், ப என வரூஉம் மூன்றும்

பல்லோர் மருங்கின் படர்க்கைச் சொல்லே

என்ற சூத்திரங்களில் குறிப்பிட்ட பகரம் கால விகுதியும் பலர் பால் விகுதியும் அடங்கியது. உரையாசிரியர்கள் உண்பார், உண்ப என்ற உதாரணங்களைக் கொடுத்துள்ளார்கள். உண்மையில் உண்பார் என்பதில் 'பகர மெய்' எதிர்கால விகுதி. 'ஆர்' பலர்பால் விகுதி. அப்படியானால் உண்ப என்பதில் பகரம் பலர்பால் விகுதியாக மட்டும் கொள்ளமுடியாது. பகர மெய் எதிர்கால விகுதி என்றும் அகரம் பலர்பால் விகுதி என்றும் பகுக்க வேண்டும். ஆனால் அகரம் பலவின்பால் விகுதியாகவும் வழங்குகிறது. தொல்காப்பியமும் அகரத்தை ஒரு பலவின்பால் விகுதியாக (அ, ஆ, வரூஉம் இறுதி/ அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை (13) குறிப்பிட்டுள்ளது. இங்கு வகரம் ஒரு உருபனாகக் குறிப்பிடப்பட்டிருப்பதும் கவனிக்கத்தகுந்தது. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் உண்பன உண்ப வருவன வருவ என்ற உதாரணங்களைக் கொடுத்துள்ளார்கள். 'உண்ப' என்பதில் தொல்காப்பியம் அகரம் பலவின்பால் உருபனாக பெரும்பான்மை வழக்கு இருப்பதால் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் பலவின் பால் சொற்களில் வரும் வருவ போன்றவைகளில் வரு+வ்+அ என்று பகுக்கலாமே என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால் தொல்காப்பியம் எதனால் பகுக்கவில்லை என்று ஆராய வேண்டும்.

சொல்லியல் நோக்கில் தொல்காப்பியம் சில உருபன்களைப் பகுக்காமல் கொடுத்துள்ளது என்பதே குறிப்பிடத்தகுந்தது.

தொகுப்பு

கட்டுண்ட உருபன்களில் மாற்றுருபுகளைத் தொகுத்தலில் ஒரு புதுமை அமைந்துள்ளது. அம், அக்கு என்ற இரண்டு மாற்று வடிவங்களை அம் என்ற சாரியையின் வடிவமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

எரு, செரு என்ற இரண்டு சொற்கள் அம் சாரியை பெற்று செரு என்ற சொல்லில் மகரம் கெட்டு வல்லெழுத்து மிகும் என்பது சூத்திரக்கருத்து (உயிர் மயங்கியல் 56). அதன்படி

எரு+அம்+குழி--›எருவங்குழி

செரு+அம்+களம்-› செரு+அ+களம்-› செரு+அ+க்+களம்›

செருவக்களம்,

இங்கு செரு+அ என்பது உடம்படு மெய் (வ்) பெற்று செருவக்களம்.

உண்மையில் தொல்காப்பியமே அக்கு என்பதை சாரியைகளில் குறிப்பிட்டதோடு (புணரியல் 17) அந்தச் சாரியை 'அக்கின் இறுதி மெய்மிசையொடும் கெடுமே' (குன்று + அக்கு + கூகை-› குன்றக் கூகை) என்று கூறுவதால் அக்குச் சாரியையாகவும் விளக்கலாம். தொல்காப்பியம் அக்கு என்பதை ஒரு சாரியையாகக் குறிப்பிட்டுள்ளது என்பது அறியத்தகுந்தது.

அப்படி விளக்காததற்குக் காரணம் எரு, செரு ஒரே ஈறு பெற்று அசையிலும் ஒத்திருப்பதால் அவைகளின் புணர்ச்சி பெரும் அளவில் ஒத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் காரணமாக இருக்கலாம்.

தனிநிலை உருபனிலும் மாறுபட்ட அடிப்படை வடிவம் என்று கொண்டு புணர்ச்சி மாற்று வடிவங்களை விளக்காமல் ஒரே அடிநிலைக்கிளவி கொண்டு விளக்கப்பட்டுள்ளது.

தேன் என்ற சொல்லில் மாற்றுருபுகள் 5 சூத்திரங்களில் (புள்ளிமயங்கியல். 45-9) அமைந்துள்ளன.

1) தேன் வல்லெழுத்து முதல் மொழி வந்தால் முன் சூத்திரப்படி இயல்பாகவும் அமையும். தேன்~தேற்குடம்

1ஆ) வல்லெழுத்து மிகும்போது ஈற்றெழுத்து கெடும். தேக்குடம்

2) மெல்லெழுத்து மிகுந்தாலும் குற்றம் இல்லை. தேங்குடம்.

3) மெல்லெழுத்து இயையின் இறுதியோடு உறழும். தேன்மொழி~தே மொழி'

4) இறால் முன் இயற்கை ஆகும். தேனிறால்

5) ஒற்று மிகுந்து தகரத்தொடும் நிற்கும், தேத்திறால்

உண்மையில் இங்கு இரண்டு அடிப்படைக் கிளவியும் ஒத்த இரண்டு வித புணர்ச்சி மாற்றமும் கொண்டுள்ளதாக விளக்கலாம்.

தேன் = தேன்குடம் தேற்குடம் தேனிறால் (தேன்~தேற்)

தேம் - தேங்குடம் தேக்குடம் தேத்திறால் (தே~தேக்)

தொல்காப்பியம் னகரம் மகர உறழ்ச்சி ஒன்பது சொற்களில் அமையும் என்று கூறியதில் (மொழி மரபு.49) உரையாசிரியர் கொடுத்த சொற்களில் 'தேன்' இல்லாவிட்டாலும் அதன் புணர்ச்சி மாற்றங்கள் ன~ம என்ற மாற்றம் உடையது என்பதைக் காட்டுகிறது. தேன் என்ற மாற்று வடிவம் அது ஒரு திசை வழக்கு என்று அடையாளம் காட்டுகிறது. தேன்குடம் போல தேங்குடம் என்பது இரட்டிக்காது வந்துள்ளது என்ற முறையில் இயல்பு வழக்கே. ம்க் என்ற மெய்மயக்கம் அமையாததால் ஓரினமாதல்

(assimilation) என்ற மாற்றம் நடைபெற்றுள்ளது, மரம் + குறிது › மரங்குறிது. தேற் குடம் தேக்குடம் என்பவை வருமொழி இரட்டித்து மொழி மாற்றம் நடைபெற்றுள்ளது. தேன்க்குடம் › தேற்குடம், தேம்க்குடம் › தேக்குடம்.

அடிநிலை வடிவத்திலும் (ன~ம) புணர்ச்சி நிலையிலும் மாற்றம் (இயல்பு, வருமொழி இரட்டித்தல்) அமைந்துள்ளது. உண்மையில்நாலு கிளைமொழி வழக்குகள் அமைகின்றன. ம~ன என்ற பெருநிலை. அவைகளுக்குள் ஒவ்வொன்றும் இயல்பு~இரட்டித்தல் என்ற மாற்றம்.

அடிநிலைக்கிளவி

கட்டுண்ட உருபன்களில் தனிநிலை உருபன்களில் அடிநிலைக்கிளவி வடிவத் தேர்வுக் கோட்பாடு ஆராயத்தகுந்தது.

பொதுவாகத் தொல்காப்பியம் தனிநிலை உருபன்களில் தனித்து இயங்கும் வடிவமும், கட்டுண்ட உருபன்களில் மொழி அமைப்பை ஒட்டிய வடிவங்களும் அடிநிலைக் கிளவிகளாக அமைக்கப்பட்டுள்ளன என்று ஒரு பொது கோட்பாடு.

எண்ணுப்பெயர்கள் பல வித மாற்றுருபுகள் கட்டுண்ட நிலையில் அமைந்தாலும் அவைகளின் தனிநிலை வடிவமே அடிநிலைக்கிளவியாக எடுக்கப்பட்டுள்ளன. திசைப்பெயர்களும் அப்படியே (குற்றியலுகரப்புணரியல்) விளக்கப்பட்டுள்ளன.

அந்த முறையில் ‘உண்டு’ என்பதை அடிநிலைக் கிளவியாகக் கொண்டு உள் என்ற மாற்றுருபு கொடுக்கப்பட்டுள்ளது (குற்றியலுகரப் புணரியல் 25). உள் என்பது ஒரு அடிச்சொல், அதன் அடிப்படையில் உள்ளே, உளர், உளது முதலிய சொற்கள் ஆக்கப்படுகின்றன. உள் என்பது கட்டுண்ட உருபன் என்பதால் உண்டு என்ற தனிநிலை வடிவத்திலிருந்து புணர்ச்சி மாற்றம் பெற்றதாக விளக்கப்பட்டுள்ளது. அந்தக் கோட்பாடு சிறப்பானதாகக் கொள்ளமுடியாது.

மூவிடப் பெயர்களும் அவைகளுக்கு உரிய தனிநிலை வடிவங்களிலிருந்து மாற்று உருபுகள் விளக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி அடுத்த இதழில்

அணிகிளர் கலாவம்

பேராசிரியர்.**கஸ்தூரிராமசாமி**
பயிரியல்துறைப் பேராசிரியர் (ப.நி.),
யாதவர் கல்லூரி, மதுரை.
கைபேசி : 9095412239

பறவையினங்களில் மயிலின் எழிலார்ந்த தோற்றத்தைக் கண்டு மயங்காதவர் இலர். மயில்களைக் காணுந்தோறும் உள்ளத்தே உவகை பூக்கிறது. ஆகையால் மயில்கள் சங்கப்புலவர்களின் கருத்தைக் கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை. மயில்களைக்கண்டு மகிழ்ந்து தம்முடைய வாழ்வியலோடு இணைத்துப் பாடியுள்ளனர். சங்க இலக்கியங்களில் மயிலுக்கு **'மஞ்ஞை'** என்ற பெயர் வழங்கி வந்திருப்பதைக் காணலாம். ஐங்குறுநூற்றில் 'மஞ்ஞைப்பத்து' (291-300) இடம்பெற்றுள்ளது. **தோகை, பீலி மஞ்ஞை** என்பன ஆண்மயிலைச் சுட்டுஞ் சொற்களாகும். ஆண்மயிலின் அழகிய தோகையினை, **'காமர்பீலி ஆய்மயிற்றோகை'** (அகம்.378), **'அணிகிளர் கலாவம்'** (நற்.264), **'மணிமருள் கலாவம்'** (அகம்.242) போன்ற அடைமொழிகளைக் கொண்டு வருணித்துள்ளனர்.

மயில்தோகையும் கருவிளையும்

பளபளப்பான பச்சைநிறத் தோகையில் காணப்படும் நீலநிற வட்டங்களைப் 'பொறிகள்' என்றும் 'கண்கள்' என்றும் கூறுவர். இன்றைய சங்குப்பூவின் சங்ககாலப் பெயர் கருவிளை. இதன் இலைகள் இளம்பச்சை நிறத்திலும் மலர்கள் கருநீல நிறத்திலும் இருக்கும். புதர்களின்மீது படர்ந்திருக்கும் கருவிளைக் கொடியில் உள்ள பசுமையான இலைகளுக்கு இடையிடையே கருநீலமலர்கள் மலர்ந்திருக்கும். அந்தக்காட்சி, புலவருக்குக் கருநீலப்பொறிகளை உடைய பச்சை வண்ணத் தோகையை நினைவூட்டுகின்றது. பச்சைப் பின்னணியில் கருநீலப்பூக்கள் மலர்ந்திருக்கின்ற காட்சியைத் தொலைவிலிருந்து பார்க்கும்போது மயில்தோகை போலத்தான் இருக்கும். மயில் ஆடும்போது தோகையை விரித்து ஒரு சிலிர்ப்பு சிலிர்க்கும். அந்த அழகே அழகு! வாடைக்காற்று வீசும்போது, மயில்தோகை போன்ற கருவிளைக்கொடி மென்மையாக அசைந்து

கொடுக்கும். இரண்டு காட்சிகளையும் கண்டவர்களுக்கு இந்த உவமையை எண்ணுந்தோறும் உவகை தோன்றும். கருவிளை மலரையும் மயிலின் ஆடலையும் கண்டு மயங்கிய, புலவர்களின் அழகியல் உணர்வு இந்த உவமைகளில் வெளிப்படுகிறது.

"*நீலப் பைம்போ துளரிப் புதல*
பீலி ஒண்பொறிக் கருவிளை யாட்டி" (குறுந்.110:3-4)

இப்பாடலைப் பாடியவர் கிள்ளிமங்கலக் கிழார்.

"***தண்புனக் கருவிளைக் கண்போல் மாமலர்***
ஆடு மயிற் பீலியின் வாடையொடு துயல்வர" (நற்.262: 1-2)

இதனைப் பாடியவர் பெருந்தலைச் சாத்தனார்.

மயில்தோகையில் உள்ள கண்கள் போன்ற பொறிகள், மாமூலனாருக்கு வட்டமான பறையை நினைவூட்டுகின்றன.

"***பறைக்கட் பீலித் தோகை***" (அகம்.15:4)

மயில் தோகையும் வேங்கைத் தாதும்

வேங்கையும் மயிலும் குறிஞ்சிநிலக் கருப்பொருள்கள். மயில் மலைப்பகுதிகளில் வேங்கை மரத்தின் மீது இனிதே அமர்ந்திருக்கும். இவ்வுண்மையை,

"***எரிமருள் வேங்கை இருந்த தோகை***" (ஐங்.294),
"***விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை***" (ஐங்.297)

எனவரும் தொடர்களால் அறியலாம். வேங்கைப்பூக்களின் பொன்னிறத் தாதுக்கள் அதனடியில் நிற்கும் மயிலின் நீலவண்ணத்தோகை மீது விழுந்து அதன் அழகை மேலும் மெருகூட்டுகின்றன.

இக்காட்சியை வெறும் வருணனையாக மட்டுமன்றி வாழ்க்கையோடு இயைபுபடுத்திப் பார்க்கும் பாங்கினைக் காணலாம். சிறைப்புறத்தே நிற்கும் தலைவனுக்குத் தலைவியின் ஆற்றாமையைப் புலப்படுத்தும் பொருட்டுத் தோழி பேசுகிறாள். தலைவனுடன் மெய்யுறுபுணர்ச்சி நிகழ்ந்தமையால் தலைவி மேனி மாறுபட்டதை அன்னை அறிந்து கொண்டாள் என்பதை **உள்ளுறையாக** வைத்து, நீலநிற மயில்தோகை மீது வேங்கை மலரின் பொன் போன்ற மகரந்தம் படிந்து கிடப்பதால் அழகிய புள்ளிகளை உடைய மயில் மகிழ்ந்து கூத்தாடுகின்றது என்கின்றார்.

"அரும்புமுதிர் வேங்கை அலங்கல் மென்சினைச்
சுரும்புவாய் திறந்த பொன்புரை நுண்தாது
மணிமருள் கலவத்து உறைப்ப, அணிமிக்கு
அவிர்பொறி மஞ்ஞை ஆடும் சோலை" (அகம்.242: 1-5)

இதே காட்சியை, **இறைச்சிப்** பொருளாகக் கொண்ட மற்றுமொரு பாடலும் அமைந்துள்ளது. வேங்கையின் நுண்தாதுகளால் அழகூட்டப் பெற்ற மயில் வருடையாட்டின் ஒலி கேட்டு அஞ்சிப் பறந்து சென்று மூங்கில் மீது அமரும் என்று தோழி கூறுகிறாள். அதுபோல் நீயும் உறவினர்க்கஞ்சி தலைவனோடு போய்விடுவாயாக என்பது அதன் இறைச்சிப்பொருள்.

"வங்கூழ்ஆட்டிய அம்குழை வேங்கை
நன்பொன் அன்ன நறுந்தாது உதிர
காமர் பீலி ஆய்மயில் தோகை... (அகம்.378: 3-5)

தோகை மயிலும் பெண்ணின் சாயலும்

ஆண்மயிலுக்குத்தான் தோகை உண்டு. பெண் மயிலுக்குத் தோகை இல்லை. ஆண் மயிலின் தோகை பெண்ணின் கூந்தலை ஒத்திருப்பதால் தோகைமயிலைப் பெண்ணுக்கு ஒப்பிட்டுப் பாடியுள்ளனர்.

கரிய பெரிய தோகையுடைய மயிலல்லாத பறவைகள் எல்லாம் சேவல் என்னும் பெயர்க்கு உரியவை எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

"சேவற் பெயர்க்கொண்ட சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே" (தொல்.பொருள்: 593)

'தோகைமயிலை ஆண்பாலின் நீக்கியது பெண்ணியற் கூந்தல் உடைமை கருதியதாம்' என்பர் உரைகாரர்கள்.

சங்ககாலந்தொட்டு இன்றுவரை தோகை மயிலை, பெண்ணின் சாயலுக்கு ஒப்பிட்டுப் பேசும் பாடற்பகுதிகள் மகிழ்வூட்டுகின்றன. பிரிவிற்குப் பின்னர் தலைவியைக் காணவரும் தலைவன்,

'நின்னே போலும் மஞ்ஞை ஆல' (ஐங்.492)

விரைந்து வந்தேன் என்று கூறுகிறான். மயில்போன்ற சிறப்புடைய மகளிர் என்ற பொருளில்

"தோகை மாட்சிய மடந்தை" (ஐங்.293)

என்றும், மயில் மகளிர் போலத் தோன்றும் என்ற பொருளில்

"**தோகை இழையணி மடந்தையர் தோன்றும்**" (ஐங்.294) என்றும் பாடிய கபிலர்.

"...... .... ***இவள்***

தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே" (ஐங்.299)

என்றும் பாடியுள்ளார். அதாவது தலைவியின் சாயலைப் பெறுவது மயிலுக்கும் அரிது எனத் தலைவன் கூறுவதாக முடித்துள்ளார்.

நல்லூர் நத்தத்தனார் இன்னும் ஒருபடி மேற்சென்று, மேகம் போன்ற கூந்தலுடைய பெண்ணைக் கண்ட ஆண் மயில் இவள் சாயலுக்கு நிகராக மாட்டோம் என்று நாணிப் பெண்மயிலுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டதாகப் பாடியுள்ளார்.

"***மணிவயின் கலாவம் பரப்பிப் பலவுடன்***

மயில் மயிற் குளிக்கும் சாயல் சாஅய்" (சிறுபாண். 15-16)

வள்ளுவரும் தலைவன் தலைவியைப் பார்த்து "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ" (1081) என்று வியந்து பேசுவதாகப் பாடியுள்ளார். இன்றைய திரைப்படக் கவிஞரும் மயில்நடனம் ஆடும் பத்மினியைப் பார்த்து 'மாதவிப் பொன்மயிலாள் தோகை விரித்தாள்' என்று பாடியுள்ளார். பெண் மயிலுக்குத் தோகை இல்லை என்பதால் பெண் மயிலாள் என்று சொல்லாமல் ***பொன் மயிலாள்*** என்று பாடியுள்ளார் எனக் கொள்ளலாம்.

மயில் தோகையும் மகளிர் கூந்தலும்

சங்க இலக்கியத்தில் மயில் தோகையையும் மகளிர் கூந்தலையும் ஒப்பிட்டுப் பாடியுள்ள பாடல்கள் பல உள்ளன. அதிலும் குறிப்பாக, கபிலரும் பரணரும் பாடிய பாடல்களில் மயில்தோகையும் மகளிர் கூந்தலும் பற்றிய உவமைகள் சிறப்பிடம் பெறுகின்றன.

"***கலிமயிற் கலாவத்தன்ன***" கூந்தலை உடைய தலைவி (அகம்.152) எனப் பரணர் பாடியுள்ளார். ஆனால்

"கொடிச்சி கூந்தல் போலத் தோகை

அஞ்சிறை விரிக்கும்....." (ஐங்.300)

எனக் கபிலர் பாடியுள்ளார். மேலும் அகவும் மயிலின் தோகை போன்று தழைத்த மெல்லிய கூந்தலை உடையவள் தலைவி என்ற பொருள்பட இருவரும் ஒரே சொற்றொடர்களை எடுத்தாண்டிருக்கின்றனர் என்பதும் வியப்பிற்குரியது.

"..... .... மென்சீர்க்
கலிமயில் கலாவத் தன்ன இவள்
ஒலி மென் கூந்தல் ...." - கபிலர் (குறுந்.225: 5-7)

"கலிமயில் கலாவத்து அன்ன இவள்
ஒலி மென் கூந்தல்...." - பரணர் (நற்.265: 8-9)

அரிசில்கிழாரும் இதே சொற்றொடரினை ஒரு சிறிய வேறுபாட்டுடன் **'கலிமயில் கலாவம் கால் குவித்தன்ன'** எனப் பயன்படுத்தியுள்ளார். மடத்தகை மாமயில் பனிக்கும் என்று மயிலுக்குப் போர்வை அளித்து அருள் செய்த வள்ளல் பேகன் தன் மனைவி கண்ணகியை விட்டுப் பிரிந்து வேறு ஒருத்தியுடன் தங்கிவிட்டான். அவளுடைய அவலநிலையை எடுத்துக்காட்டி மனைவியுடன் சேருமாறு கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்க் கிழார் ஆகிய புலவர்கள் வேண்டுகின்றனர். கணவன் தன்னை விட்டுப் பிரிந்ததால் அவள் தன் கூந்தலைப் பராமரிக்கவில்லை. அதனால் அவளுடைய கூந்தல் குவிந்திருக்கும் மயில்தோகை போல உள்ளது. அவள் கூந்தலுக்கு அகிற்புகையூட்டி மலர் சூடுமாறு அவளிடம் சென்று சேரவேண்டும் என்று பேகனுக்கு அறிவுறுத்திக் கூறுகிறார் புலவர் அரிசில்கிழார்.

"கலிமயில் கலாவம் கால் குவித்தன்ன
ஒலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇ
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்க......." (புறம்.146: 8-11)

வெண்மேகம் தவழும் மலையின் மீது மயில் தன் தோகையை விரித்தாடும் காட்சி பெண்கள் கூந்தலை விரித்து அகிற்புகை ஊட்டுவது போல இருப்பதாகச் சிறுபாணாற்றுப்படை கூறுவதும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

"........... .... மகளிர்
அகில்உண விரித்த அம்மென் கூந்தலின்
மணிமயில் கலாவம் மஞ்சுஇடைப் பரப்பி" (சிறுபாண்.262-265)

அகிற்புகை ஊட்டாத கூந்தல் மட்டுமல்ல; பின்னிய கூந்தல் விரிந்த தோகைபோல் இருக்காது. பின்னல் அவிழ்ந்தமையால் விரிந்த கூந்தலை

உடைய தலைவி வந்த காட்சி, மலையிலிருந்து இறங்கும் மயிலைப் போல இருந்ததாகக் கபிலர் பாடியுள்ளார்.

"பின்னுவிடு நெறியின் கிளைஇய கூந்தலள்
வரைஇழி மயிலின் ஒல்குவனள் ஒதுங்கி" (அகம்.158: 4-5)

கடற்கரைச் சோலையிடத்திலுள்ள பெண்ணிடம் தன் நெஞ்சைப் பறிகொடுத்த ஒரு தலைவன் அவளைப் பற்றிப் பேசுங்கால் '***மயிற்கண் அன்ன மாண்முடிப்பாவை***' (குறுந்.184) என்கிறான். இப்பாடலைப் பாடியவர் கபிலரிடம் குறிஞ்சிப் பாட்டைக்கேட்ட ஆரியவரசன் யாழ் பிரகதத்தன்.

மேகம் மழைத்துளியைப் பொழிந்த காலை நேரத்தில் நீலமணி போன்ற கழுத்தை உடைய மயில் தன் அழகிய தோகையை விரித்து ஆடும். மயில்தோகை போன்ற கூந்தல் காற்றால் விரிந்து விளங்கும்படி வெயில் இல்லாதபோதே விரைந்து செல்வாயாக எனத் தலைவன் தலைவிக்கு உரைத்ததாக ஒருபாடல் நற்றிணையில் இடம் பெற்றுள்ளது.

"அணிகிளர் கலாவம் ஐது விரித்து இயலும்
மணிபுரை எருத்தின் மஞ்ஞை போல நின்
வீபெய் கூந்தல் வீசுவளி உளர
ஏகுதி - மடந்தை! - எல்லின்று பொழுதே" (நற்.264: 3-6)

மகளிரின் துன்பியலும் மயிலும்

தோகை விரித்தாடும் ஆண்மயிலையும் பெண்ணின் அழகையும் ஒப்பிட்டுப் பேசும் பாடற்பகுதிகள் மகிழ்வூட்டினாலும், மகளிர் துன்பியல் நிகழ்வினை வெளிப்படுத்தும் நிலையில் மயில் எடுத்தாளப் பட்டிருப்பது நெஞ்சைத் தொடுகிறது. நெருப்புப் போன்ற செந்நிறப் பூக்கள் நிறைந்த இலவமரத்தின் மீது ஒரு மயில் ஏறி அமர்கின்றது. இக்காட்சியை, விரித்த கூந்தலுடன் இறந்த கணவனோடு உடன்கட்டை ஏறிய பெண் போலத் தோன்றிய ஓர் அவலக் காட்சியுடன் ஒப்பிடுகிறார் ஒரு புலவர்.

'இலவமேறிய கலவ மஞ்ஞை எரிபுகு மகளிரேய்க்கும்'

(ஐங்.மிகை 3)

பூத பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு '***நீர்வார் கூந்தல் இருபுறம் தாழத்***' தீ புகுந்த காட்சியை நேரில் கண்ட மதுரைப் பேராலவாயர் பாடிய பாடல் புறநானூற்றில் (247) உள்ளது. அது போன்றதொரு அவலம் நிறைந்த காட்சியைக் கண்டிருப்பார் போலும்.

அதனால்தான் நெஞ்சை அள்ளும் எழிலார்ந்த இயற்கைக் காட்சியை, நெஞ்சை உருக்கும் காட்சியோடு ஒப்பிட்டுப் பாடியுள்ளார் அப்புலவர்.

முடிவுகள்

1. சங்கப்புலவர்கள் மயிலின் விரிந்த தோகையினைக் கருநீலப் பூக்களுடன் தோன்றும் கொடியுடன் ஒப்பிட்டு உவந்துள்ளனர்.

2. வேங்கைப் பூவிலிருந்து சிந்திய மகரந்தப்பொடி, அதன்கீழ் நின்ற மயில்தோகைமீது படிந்துகிடப்பதைக் களவுத் தலைவியின் மேனியில்தோன்றிய மாற்றத்திற்கு உவமையாகக் குறிப்பிட்டுள்ளனர்.

3. பறவையினங்களில் ஆண், சேவல் எனப்படும். ஆனால் ஆண்மயிலைத் தோகை மயில் என்பர். அதனைச் சேவல் மயில் என்று சொல்லும் மரபு இல்லை. ஆயினும் அதன் தோகையைக் கொண்டு மகளிர் சாயலுக்கு உவமை கூறுவது இலக்கியமரபு.

4. மயில்தோகையினை மகளிர் கூந்தலின் எழிலோடு ஒப்பிட்டுப் பாடிய பாடல்கள் பலவுள்ளன. அவற்றின்மூலம் மகளிர்கூந்தல் ஒரு கவர்ச்சிப் பொருளாகப் பார்க்கப்பட்ட உண்மை தெரிகின்றது.

5. மயில்தோகை போன்ற கூந்தல் என்றும், மகளிர் கூந்தல் போன்ற மயில்தோகை என்றும் ஒன்றோடு ஒன்றை உவமித்துப் பாடும் கற்பனைகள் நம்மை ஈர்க்கின்றன.

6. பின்னிய கூந்தல் அவிழ்ந்துவிட விரிந்தகூந்தலோடு வந்த தலைவியைப்பார்த்து அவள் மலையிலிருந்து இறங்கிய தோகைமயில்போல இருந்தாள் என்றது இலக்கிய வளம் பொதிந்த வருணனையாகும்.

நாலடியார் தெளிவுரை

குஞ்சி யழகும் கொடுத்தாளைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு.

முது முனைவர்
இரா.இளங்குமரனார்

'மொழிப்பற்று' - மு.வ.வின் சிந்தனைகள்

முனைவர் **நெல்லை ந.சொக்கலிங்கம்**
'பொதிகை'
78/11, இராதாகிருட்டிணன் தெரு,
நாகமலை புதுக்கோட்டை,
மதுரை - 625019.
கைபேசி : 9940084364

தோரணவாயில்

"அரசினரின் மொழியாக அரசியலார் மொழியாக அரசியல் சார் வரிசையுறு சட்டமன்றின் மொழியாக வையம் அறி மொழியாகத் திருமலிந்த தமிழ்மொழி தான் ஆம் வகை நம்புலவர் சேர்ந்து தொண்டு புரிக என வேண்டுகின்றோம், பொழிக எனவே வேண்டுகின்றோம் பொன் மழைதான்!" (பாவேந்தர் பாரதிதாசன், தமிழியக்கம், ப.20).

1945-இல் ஒரே நாள் இரவில் இயற்றப்பட்ட '***தமிழியக்கம்***' தமிழுணர்வின் பிழிவாகப் பாவேந்தரின் மொழிப்பற்று வெளிப்படும். 1956-ஆம் ஆண்டு அறிஞர் மு.வரதராசனாரின் எண்ணங்களின் வெளிப்பாடாக '*மொழிப்பற்று*' என்ற நூல் வெளி வந்தது. 2018-இலும் மேற்கண்ட இருவரின் எண்ணங்களும் நூற்றுக்குநூறு விழுக்காடு வெற்றி பெற்றனவா? என்று ஆய்வு செய்வது இன்றைய நம் தேவையும் கடமையும் ஆகும். இதன் அடித்தளத்தில் நின்று, மு.வ.வின் மொழிப்பற்றுக் குறித்த சிந்தனைகள் இக்கட்டுரை வழி எடுத்துரைக்கப் பெறுகின்றன.

தாய்மொழியின் மேல் பற்றுக்கொள்வது மொழியறிஞர்கள் ஏற்றுக் கொள்ளுகின்ற ஒன்றே! பற்று வேறு; வெறி வேறு; திணிப்பு வேறு. இவற்றை நாம் குழப்பிக் கொள்ளக்கூடாது. இத் தெளிவான சிந்தனைப் போக்குடன் மு.வ.வின் மொழிப்பற்றுக் குறித்த சிந்தனைகள் அமைந்து, அவர்தம் நடுநிலை மனநிலையைத் தெளிவுறுத்தும்.

மொழிப்பற்று

மு.வ.வின் இந்நூல் 1956-இல் முதற்பதிப்பாக வந்துள்ளது. இந்நூலில் 18 கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள் தமிழ் இதழ்களில் அவ்வப்போது அறிஞர் மு.வ.எழுதிய கட்டுரைகள் ஆகும். 136

பக்கங்களில் இந்நூல் விரிந்து செல்கின்றது. சென்னை, பாரிநிலையத்தார் விற்பனை உரிமை பெற்றுள்ளனர். மொழிப்பற்று நூலின் விற்பனைத் தொகை திரு.வி.க. பள்ளிக்குரியது என்று நூன்முகப்பில் ஆசிரியர் மு.வரதராசனார் பதிவு செய்து தம் கல்வித் தொண்டினை நிலைநாட்டியுள்ளார்.

நம் இந்தியநாடு உரிமை பெற்ற அந்நாட்களில் 'எனக்கு டமில்' தெரியாது என்று பெருமிதத்துடன் பேசித்திரிந்த காலகட்டத்தில் தாய்மொழிப் பற்றின் இன்றியமையாமையை நிலைநாட்ட வேண்டிய இழிநிலை தமிழ்ப் பேராசிரியர்களுக்கும் தமிழ்ச்சான்றோர்களுக்கும் உரிய கடமையாக இருந்தது. அக்கடமையுணர்வே அறிஞர் மு.வ.வை மொழிப்பற்றுக் குறித்துப் பல்வேறு கோணங்களில் - நிலைகளில் கட்டுரை எழுதும் வண்ணம் தூண்டியிருத்தல் வேண்டும்.

உரிமை இதுதான், இருவகைக்கேடுகள், தியாகம் தேவை, மொழிச்சுமை, எதிர்பார்த்தவை, அடிமை மனப்பான்மை, உண்மை ஒதுங்குகிறது, முடியுமா?, தாயா? பேயா?, தமிழுக்கு முதல் இடம், தாராள மனப்பான்மை, பயனற்ற உழைப்பு, ஏன் இந்தத் தயக்கம்? அன்னையின் துயர், வானொலியில் தமிழிசை, புறக்கணிப்பு, கண்போய்விடும், கோயிலில் நாத்திகம் எனப் பதினெட்டுத் தலைப்புகளில் இந்நூல் கட்டுரைகள் அமைகின்றன. மு.வ.வின் தமிழ்நடை தனித்தமிழ் நடை என்பதோடு, ஆற்றொழுக்கானநடை, தாம் சொல்ல எண்ணும் கருத்தைக் காரணங்கள் வழி விளக்கி நிறுவும் தெளிவான தமிழ்நடை, எளிய சொற்களின் கோவையான மென்மையான நடை, உவமைகள் கூறித் தக்கவாறு உரைக்கும் தருக்க நடை - இப்படி எல்லா வகையிலும் படிப்பவர் உள்ளத்தைக் கவர்ந்திழுக்கும் நடைநலமும் செழுமையும் நம் உள்ளம் கவர்வனவாகும்.

அறிஞர் மு.வரதராசனார் நூலின் கட்டுரைகளைத் திருப்பிச் சொல்வது தகாது; அது பொருந்தாது என்பது கருதித் தேவையான கருத்துக்கள் மட்டுமே இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. மேலும் அவர்தம் நடுநிலை மனவுணர்வை உறுதிப்படுத்துவதோடு தமிழ்ஞாலத்தவரிடம் இன்னும் மொழியுணர்வு - மொழிப்பற்று - தாய்மொழி ஈடுபாடு இவை தழைத்துச் செழிக்க வேண்டும்! அப்படிச் செழிக்குமானால் அறிஞர் மு.வ.விற்குச் செய்திடும் நன்றிக்கடனாகும்.

தமிழின் உயிர்

தமிழ்மொழியே மொழி என்பதனைத் தேவநேயப்பாவாணர் பல்லாண்டுகளாக ஆய்வு செய்து நிறுவியுள்ளார். இலக்கண இலக்கியச் செழிப்பும் பிறமொழிகளின் தாக்குதல்கள், கலப்புப் போன்ற பல்வேறு இடையூறுகள் ஏற்பட்ட பின்பும் தமிழ் தன் இளமை குன்றாமல் கன்னித் தமிழாக இன்றும் உயிர்ப்புடன் வழங்கி வருகின்றமைக்குக் காரணம் அது தமிழ் மக்களின் வீட்டு மொழியாய் நடைமுறை வாழ்வியல் மொழியாய் விளங்கி வருதலேயாகும்; இது கண்கூடு. இவ்வுயிர்ப்புத் தன்மை குறித்துப் பேசவந்த, பேரா.மு.வரதராசனார் "தமிழ் பலவளம் படைத்துப் பலமொழிக்கும் தாயாகும் பெருமையும் பெற்றுத் தொன்மைச் சிறப்புடையதாய் விளங்குவதாகப் பெருமை கொள்ளலாம். அதனால் அது வாழ முடியாது. மொழியின் உயிர் புலவரிடம் இல்லை; பொதுமக்களின் உள்ளத்தில்தான் உள்ளது. மக்களின் வாழ்க்கை அரசியலை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் எந்த மொழி அரசியல் மொழியாக விளங்குமோ அந்த மொழி தான் மக்களின் மொழியாக விளங்கும். நேற்றுத் தோன்றிய கொச்சை மொழியாக இருந்தாலும் அரசியல் மொழியானால் அது ஓங்கி வாழ முடியும்... ஆகவே தமிழ்நாட்டின் ஆட்சி தமிழில் நடைபெற்றால்தான் தமிழர் தமிழைக் கற்றுப் போற்றுவார்கள்; தமிழ் வாழ வழி உண்டு; இல்லையானால் இல்லை" (மொழிப்பற்று, ப.12) என்று அன்னைத் தமிழின் வாழ்வு குறித்து மு.வ.தக்கமுறையில் எடுத்துரைப்பதனை நம் மக்கள் மனத்தில் உள்வாங்கிக் கொண்டு மொழிப்பற்றுடையவராய் வாழவேண்டியதன் தேவையை - கடமையாக உணர்ந்து வினைபுரிய வேண்டும் என்பது தெற்றெனப் புலப்படும்.

வரலாறு புகட்டும் பாடம்

தமிழருடன் பிறமொழியாளரை ஒப்பிட்டுக்காட்டி நம் தமிழரின் போலியான எண்ணங்கள் மொழிச் சீரழிவிற்கு இட்டுச் செல்லும் என்பதனை வங்காளியர், சப்பானியருடன் ஒப்பிட்டுக் காட்டித் தமிழர்கள் மொழிப்பற்றுக் கொண்டவராய் வாழவேண்டிய கட்டாயத்தை அறிஞர் மு.வ.பின் வருமாறு தெளிவுறுத்துகின்றார். "ஆங்கிலம் மற்றவருக்குப் பயன் கருவியாக உள்ளது; தமிழர்க்கோ தடைப்படுத்தும் கருவியாக உள்ளது. மற்றவர்கள் அரைகுறையாகவே அதைக் கற்று உலக மதிப்பைப் பெற்று உயர்ந்து வாழ்கின்றனர். தமிழரோ, ஆங்கிலேயரைப்

போலவே பேசவும் எழுதவும் பாடுபட்டு முழுவதும் கற்க முயன்று தோல்வியுற்றுச் சீரழிகின்றனர். இந்த நிலையில் குப்பையில் முளைத்த வேப்பஞ்செடி மரமாகிச் செழித்துப் பரவிப் பெருநிலை அடைகிறது. உயர்ந்த தென்னையிலிருந்து பெற்ற நெற்று, கன்றாக வளரும் போதே போதிய வளர்ச்சி பெறாமல் கூழையாய்க் கெடுகிறது...'' என்று கூறிவிட்டு அவர், “பழம் பெருமைக்கு மட்டும் இது வரையில் எந்த நாட்டையும் மொழியையும் காக்கவில்லை. பழம் பெருமை உடைய நாடுகள் பலவும் மொழிகள் பலவும் அழிந்திருத்தலை வரலாறு கூறுகின்றது'' (மொழிப்பற்று, பக்.22-23) என்று தகுந்த சான்றுகள் கூறி நம் தமிழ் மக்கள் மொழிப்பற்றுடையவராய் வாழ்வதன் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றார். மேலும் மு.வ. “தபால் கார்டு முதலியவற்றில் தமிழுக்கு இடமில்லாத நிலைமை ஏற்பட்ட பிறகும், தமிழர்க்கு இந்தக் கடமையுணர்ச்சி ஏற்படவில்லை. தமிழ் போதனை மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஆக வழியின்றிக் கேடு உறுகின்றது. செய்யத்தக்கவற்றைச் செய்யாமல் அடையும் கேடு இது.

'***செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க***
செய்யாமை யானும் கெடும்' (திருக்குறள் 466) (மொழிப்பற்று, 24)

என வள்ளுவ நெறி சொல்லி மு.வ.மொழிப்பற்றை நிலைநாட்டுவார்.

இங்கு தமிழ் படிக்காமல் பட்டம் பெறலாம்

தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்களில் தமிழையே படிக்காமல் ஒருவன் பட்டம் பெறலாம் என்ற இழிநிலை இன்றும் தொடர்கின்றது. இந்திய நாட்டில் வேறு மாநிலங்களில் அவரவர் தாய்மொழிக் கல்வி பெறாமல் பட்டம் பெற முடியாது. ஆனால் தமிழ்நாட்டில் தமிழ் மொழிக்கல்வி கற்காமலேயே பட்டம் பெறலாம் என்ற நிலையுள்ளதே என வருந்தும் அறிஞர் மு.வ. “தமிழே தமிழர்க்குக் கட்டாயப் பாடமாகாத இந்த நாட்டில் சமஸ்கிருதத்தை எல்லா மாணவர்க்கும் கட்டாயப் பாடமாக்க முயற்சியும் நடைபெறுகிறது...'' என்று மனம் வருந்திய மு.வ. “தாய்மொழியைப் புறக்கணித்துவிட்டுச் சமஸ்கிருதம் படிக்கவும் வாய்ப்பு இருக்கிறது. நம் உரிமையை யார் எப்போது எவ்வகையில் பறித்தாலும் அவரோடு போராடவேண்டும் என்று நாட்டுத்துறையில் உணர்ந்த மக்கள், மொழித்துறையில் மட்டும் அதற்கு மாறாக உரிமையைப் பறிப்பதையும் பறி கொடுப்பதையும் கடமையாகக் கொள்வது ஏன்? இதுவும் எதிர்பாராததே'' (மொழிப்பற்று, பக்.47-48) என்று உள்ளம் நொந்து

பேசுவார். இன்று வரையிலும் அதே நிலைதான் தொடர்கிறது என்பது மனவேதனையை மிகுவிக்கின்றது. இதற்கும் ஒரே தீர்வு தாய்மொழிப்பற்றைத் தமிழ்மக்கள் தளரவிடாமல் தவிர்க்காமல் தழைக்கச் செய்வதொன்றே!

முதலிடம் தமிழுக்கு

வேற்று நாட்டுமொழி மிகு சிறப்புடையதாக இருந்தாலும் நம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக அமைவது நாட்டு மொழியாகிய தாய்மொழியே என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை! வேற்றுமொழி சிறப்புடையதாக இருந்தாலும் அதற்கு முதல் இடம் தருதல் கூடாது என்பதில் பேரா.மு.வரதராசனார் அழுத்தமான கொள்கைப் பிடிப்புடன் வாழ்ந்தார். அதன் வெளிப்பாடே 'தமிழுக்கு முதல் இடம்' என்ற கட்டுரை. பிறநாட்டு மொழியின் சிறப்புக் கருதி அதற்கு இரண்டாம் இடம் தரலாம் என்கிறார் மு.வ. அதற்கு முதல் இடம் தந்தால் என்ன பின்விளைவுகள் ஏற்படும் என்பதனை இதோ அவரே கூறுகின்றார்; அது: "வேற்று நாட்டு மொழி எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் முதல் இடம் பெறக்கூடாது. அதனால் விளையும் பயன் கருதி அதற்கு இரண்டாம் இடம் தரலாம். அவ்வாறு செய்தால்தான் அந்தநாட்டு மக்களின் வாழ்வு உட்பகையும், பிளவும், குழப்பமும் இல்லாததாக இருக்க முடியும்" என்று தாய் மொழிப்பற்றின் மேன்மையை எடுத்துரைத்துள்ளார்.

"ஒரு மொழி ஆட்சித்துறையைக் கைப்பற்றிவிட்டால் மற்றத்துறைகள் தாமே வந்து அதனிடம் சேரும். ஒலியிலும் இலக்கணத்திலும் சொல்வகையிலும் மிக்க குறைபாடுகள் உள்ள மொழியாக இருந்தும், ஆங்கிலம் உலகமொழியாக வளர்ந்துள்ளதற்குக் காரணம் அதுதான். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்ற பழமொழி மொழித்துறைக்கும் பொருந்தும்" (மொழிப்பற்று, ப.70) என்று அறிஞர் மு.வ.கூறுவதனைத் தமிழ் மக்கள் இன்றாவது உணர்ந்து மொழிப்பற்றுடையவர்களாய் மாறவேண்டாமா?

புறக்கணிப்பு

"வலியோர் சிலர் எளியோர்தமையே வதையே புரிகுவதா?" என்று பாரதிதாசனார் வினவுவது போன்று அறிஞர் மு.வ. மேற்கண்ட தலைப்பிட்ட கட்டுரையில் அடக்குமுறை, புறக்கணிப்புக் குறித்து விளக்கும் பாங்கு எண்ணி எண்ணிச் சிந்திப்பதற்கு உரியதாகும்.

"அடக்குமுறை போலவே புறக்கணிப்பும் கொடியது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. அடக்குமுறை செய்யும் கொடுமையில் போராட்டத்திற்கும் தற்காப்புக்கும் இடம் உண்டு. புறக்கணிப்பின் கொடுமையில் இவற்றிற்கு இடம் இல்லை. இவ்வகையில் நோக்கினால் அடக்குமுறையை விடப் புறக்கணிப்பே கொடியதாகவும் உள்ளது... இலக்கியத் துறையிலும் இது உண்மையாகவே உள்ளது. ஒரு காலத்தில் சங்க இலக்கியத்தையும் காவியங்களையும் கற்ற புலவர்கள் புலமை பெற விரும்பியவர்க்கு அந்த நூல்களின் பொருளையும் நயத்தையும் கற்பித்துள்ளனர். ஆகவே கற்ற புலவர்கள் தம் அறிவை ஒரு சிலர்க்கு மட்டும் பயன்படுத்திப் பெரும்பாலான மக்களைப் புறக்கணித்து வந்தனர். பெரும்பான்மையான மக்களைப் புறக்கணித்தவர்களின் குறையே ஆகும். ஒரு சிலரை நம்பி உயர்ந்த நூல்களை வாழவைத்திட முடியாது என்னும் உண்மையை உணர்தல் வேண்டும்" (மொழிப்பற்று, ப.123) என்று சீர்தூக்கி எடைபோட்டுக் கூறுவார்.

"தமிழ்நாட்டுப் பாடகரே!
தமிழ்பாடித் தமிழ்மானம்
காப்பீர் நன்றே

தமிழ்மொழியில் தமிழ்ப்பாடல்
மிகவுண்டு தமிழ்க்கவிஞர்
பல்லோர் உள்ளார்" *(தமிழியக்கம், ப.34)*

என்று பாவேந்தர் பாடகர்களுக்குப் பாடம் புகட்டுவார். மு.வ.வும் தம்முடைய தமிழிசையுணர்வை வெளிக்காட்டும் வகையில் அமைவது இக்கட்டுரை.

தமிழகத்து வானொலி நிலைய இசை நிகழ்ச்சி குறித்து இதோ: "இன்று சென்னை தமிழ்நாட்டின் தலைநகரம் என்பது மக்களின் தீர்ப்பு ஆகிவிட்டது. நிலைமை இவ்வளவு மாறிய பிறகும், சென்னை வானொலியில், ஸ்வாகதம், கீதமஞ்சரி, கீதமாலிகா, லலிதகீதம், சுருதிமணிமாலா, லலிதகானம்... முதலாய பகுதிகள் யாருக்காக நிகழ்கின்றனவோ தெரியவில்லை! ஸ்வாகதம் முதலான இந்தத் தலைப்புகளே மக்கள் விரும்பாதவை; மக்களுக்கு விளங்காதவை. ஒருசில சங்கீத வித்வான்களுக்கு விளங்கக் கூடியவைகளாக இருக்கலாம். ஆனால் வானொலி நிலையம் பொதுமக்களுக்காக

ஏற்பட்டது... இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அதிகாரிகள் வற்புறுத்துவதைவிட இப்படி இருந்தால் மகிழ்வோம் என்று மக்கள் விரும்புவதை அறிந்து நடப்பது நல்லதாகும்'' (மொழிப்பற்று, பக்.114-115) என்று கடிதோச்சி மெல்ல எறிக என்னும் குறள் நெறியில் அறிஞர் மு.வ.மொழிப்பற்றை விதைப்பார். இந்தி, வடமொழி, தெலுங்குப் பாடல்கள் அம்மொழி பேசும் பகுதியில் அம்மக்களுக்கு ஒலிபரப்புவதே தகும். அதனை விடுத்துத் தமிழ் மக்கள் விரும்பாத ஒன்றை - தெரியாத ஒன்றை எப்படித் தமிழ் மக்கள் அனுபவிக்க முடியும்? என்று அவர் வினவுவது சரிதானே!

கோயிலில் நாத்திகம்

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை நடைபெறுவதில்லை. தமிழிலும் அருச்சனை செய்யப்படும் என்று அரசாணை வாயிலாக அறிவுறுத்தப்பட்டது உண்மை; ஆனால், அவ்வறிப்புப் பலகையை எங்கோ கண்ணுக்குத் தெரியாத மூலையில் வைத்திருப்பார்கள். சரி! திருமுறைகளும் திவ்விய பிரபந்தப் பாசுரங்களும் இறைவன் முன் பாடுவதற்கு அனுமதி சில கோயில்களில் இல்லை! இவற்றுக்கெல்லாம் தாய்மொழிப் பற்று இல்லாமையே காரணமாகும்.

"சொற்கோயில் நம் போற்றித்
திருஅகவல் செந்தமிழில்
இருக்கும் போது
கற்கோயில் உட்புறத்தில்
கால்வைத்த தெவ்வாறு
சகத்ர நாமம்" ***(தமிழியக்கம், ப.24)***

என்று பாவேந்தர் பாரதிதாசன் இடிமுழக்கமெனக் கேட்பார்!

பேரா.மு.வ.வின் மொழிப்பற்று நூலில் வரும் இறுதிக்கட்டுரையின் தலைப்பு 'கோயிலில் நாத்திகம்' என்பதாகும். "கோயில்களில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் பல உள்ளன. அவற்றைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளி வைக்கும் மனப்பான்மை நெடுங்காலமாக இருந்து வருகின்றது. இவ்வாறு காலந்தள்ளுவதால், கோயில்களை வெறுக்கும் மனப்பான்மை மற்றொருபுறம் வளர்ந்து வருகின்றது. பல ஆண்டுகளுக்கு முன்பே காந்தியடிகள் சமூகச் சீர்த்திருத்தங்களைச்

செய்ய வேண்டிய கடமையை வற்புறுத்தி எழுதிய போது, "இத்தகைய சீர்திருத்தங்களைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒதுக்கி வைப்பது கூடாது. நாட்டிற்குச் சுதந்திரம் வந்தபிறகு செய்வோம் என்று தள்ளி வைப்போமானால், நாம் சுதந்திரத்திற்கே தகுதியற்றவர்களாவோம் என்று அறிவுறுத்தினார்" (மொழிப்பற்று, ப.131) என்று அண்ணலின் கருத்தைச் சுட்டி மொழிப்பற்றின் தேவையை மு.வ.தெளிவுறுத்துகின்றார்.

இன்று சாதி வேறுபாட்டாலும் பணத்தாலும் வரும் உயர்வுதாழ்வும் நம் திருக்கோயில்களில் மக்கள் பிரிக்கப்பட்டு இறைவன் முன் நடத்தப்படும் கொடுமைகளை நாடோறும் பார்க்கின்றோம். இவ்வேறுபாடுகளை ஆழமாக எண்ணிய மு.வ. "கோயிலுக்கு வெளியே உள்ள நாத்திகம் பேச்சளவில் நிகழ்வது; ஆனால், மேற்கண்டவை செயலளவில் நிகழ்பவை. கோயிலுக்கு வெளியே நிலவும் நாத்திகம் கடவுளைப் பற்றிக் கவலை இல்லை என்பவர் பேசும் கொள்கை; ஆனால் மேற்கண்டவை கடவுளைக் கருதி வாழ்வதே வாழ்க்கை என்பவர் செய்யும் தவறுகள்... அதனால் மற்ற மூடப் பழக்க வழக்கங்களைவிட, நாத்திகப் பேச்சைவிட, கோயிலுக்குள்ளே கையாளப்படும் மேற்கண்ட நாத்திகப் பழக்கங்கள் மிகப் பொல்லாதவை; இவற்றைத் திருத்துவது முதல் கடமையாக வேண்டும்" (மொழிப்பற்று, பக்.135-136).

முடிவுரை

அறிஞர் மு.வரதராசனாரின் தாய்மொழியில் பற்றுக் கொள்ளும் உணர்வை, கல்வி, அரசியல், ஆட்சி, ஊடகங்கள், கோயில்கள் எனப் பல இடங்களில் வலியுறுத்த வேண்டியதன் இன்றியமையாமையை நன்கு தெளிவுபடுத்தி, அழுத்தம் தந்து வடித்துள்ள இந்நூலின் கருத்துக்கள் யாவும் நடைமுறைப்படுத்தி நாம் வெற்றி காண்போம்!

பயன்பட்ட நூல்கள்

1. மு.வரதராசனார், மொழிப்பற்று, பாரி நிலையம், சென்னை 1, 1958, இரண்டாம் பதிப்பு.

2. பாரதிதாசனார், தமிழியக்கம், மணிவாசகர் நூலகம்,சென்னை 1, திருந்திய பதிப்பு, 1992.

3. தி.நல்லப்பன், தமிழ்மொழியும் அதன் சீரழிப்பாளர்களும், குறிஞ்சி வெளியீடு, வலையப்பட்டி (புதுக்கோட்டை), 1982.

சங்கச் செய்திகள்

05.04.2019 அன்று நான்காம் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரித் தமிழ் உயராய்வு மையமும் சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழும் இணைந்து “தமிழிலக்கியப் படைப்புகளில் பெண் பதிவுகளும் படைப்பாளுமைகளும்” என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கு நடத்தியது. தொடக்கவிழாவிற்கு கல்லூரிச் செயலர் இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் தலைமை தாங்கினார். சங்கச் செயலர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் கருத்தரங்க மலரினை வெளியிட, கவிதாயினி கலைமாமணி ஆண்டாள் பிரியதர்சினி அவர்கள் நூலினைப் பெற்றுக் கொண்டு சிறப்புரை ஆற்றினார். காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக புல முதன்மையர் முனைவர் வ.ராசரத்தினம் அவர்கள் வாழ்த்துரையும் வழங்க சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் முதன்மை ஆசிரியர் மற்றும் கருத்தரங்க இயக்குநர் முனைவர் ந.முருகேசபாண்டியன் அவர்கள் கருத்தரங்க அறிமுகவுரை வழங்கினார். கல்லூரி முதல்வரும் கருத்தரங்கத் தலைவருமான முனைவர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரையும், உதவிப்பேராசிரியரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான முனைவர் அ.நந்தினி அவர்கள் நன்றியுரையும் வழங்கினர். கருத்தரங்க நிறைவு விழாவிற்கு சங்கச் செயலர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை தாங்கினார். சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் முதன்மைப் பதிப்பாசிரியர் திரு.லட்சுமணன் அவர்கள் முன்னிலை வகித்தார். கவிஞர் முனைவர் பூ.மு.அன்புசிவா அவர்கள் வாழ்த்துரையும் கவிஞர் முனைவர் அ.சக்திஜோதி சிறப்புரையும் வழங்கினர். கல்லூரி துணைமுதல்வரும் கருத்தரங்க இயக்குநருமான முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் வரவேற்புரையும், நூலகரும் கருத்தரங்கத் துணை ஒருங்கிணைப்பாளருமான தி.பிருந்தா அவர்கள் நன்றியுரையும் வழங்கினர். கல்லூரி மாணவியர் த.கார்த்திகா மற்றும் கா.பிரியரஞ்சனி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர்.

06.04.2019 அன்று சங்க வளாகத்தில் தமிழறிஞர் சிலம்பொலி சு.செல்லப்பன் அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மதுரை மணியம்மை மழலையர் தொடக்கப்பள்ளித் தாளாளர் பி.வரதராசன், கல்லூரி முதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் தமிழ்மொழிக்கும், அதன் வளர்ச்சிக்கும் ஆற்றிய அரும்பணிகள் குறித்துப் புகழ்மாலை சூட்டப்பட்டது. மதுரை நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினரும் முதுமுனைவருமான இரா.இளங்குமரனார் அவர்கள் எழுதிய இரங்கற்பா அஞ்சலிக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

11.04.2019 அன்று செந்தமிழ்க் கல்லூரியில் "கல்வெட்டுகளும் செப்பேடுகளும்" என்னும் பொருண்மையில் பயிலரங்கம் நடைபெற்றது. தொல்லியல் துறைப் பேராசிரியர் வெ.வேதாசலம் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குப் பயிற்சி வழங்கினார். உதவிப் பேராசிரியர் முனைவர் ப.ஆறுமுகம் மற்றும் முனைவர் சு.மலர்விழி ஆகியோர் பயிலரங்கினை ஒருங்கிணைத்தனர். முதுகலை முதலாம் ஆண்டு மாணவி த.கார்த்திகா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

12.04.2019 அன்று அலகாபாத் பாஷா சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.ம.கோவிந்தராசன் அவர்கள் மொழிப்பற்று, மொழிபெயர்ப்பு மற்றும் மொழி வளர்ச்சிக்காக ஆற்றவேண்டிய பணிகள் குறித்துக் கல்லூரி உதவிப் பேராசிரியர்களுடன் கலந்துரையாடினார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகள், ஒப்பிலக்கியப் பள்ளித் தலைவர் முனைவர் ச.கவிதா அவர்கள் இந்நிகழ்வுக்கு முன்னிலை வகித்தார். முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரையும் துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் நன்றியுரையும் வழங்கினர்.

ஜூன் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

வெள்ளைவாரணர்
(ஜூன்.13)

அண்ணாமலைச் செட்டியார்
(ஜூன்.15)

கவிஞர் சுரதா
(ஜூன்.19)

ச.மெய்யப்பனார்
(ஜூன்.28)

(கோ)விந்தன்
(ஜூன்.30)

புதுமைப்பித்தன்
(ஜூன்.30)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்னம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன்
இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க்கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு,
மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1